ஆனந்த போதினி

6

௨௮

ஜூன், 1942

C

N211,N15
N42,28.6
199747



# ஆனந்த போதினி


# ANANDA BODHINI

Vol. 28. பொருளடக்கம். No. 6.

சித்திரபானு௵ மார்கழி௴ கவ







| உள்ளடக்கம். | பக்கம். |
|---|---|
| 1. கடவுள் வணக்கம் ... | 241 |
| 2. சர்வகலாசாலை—ஒரு கலைக் கோயில் ... | 242 |
| 3. 'ஆனந்தபோதினி பஞ்சாங்க' வழக்கு ... | 246 |
| 4. தமிழ்மறை அருளிய தெய்வம் | 247 |
| 5. வாராத நினைவுகள் ... | 251 |
| 6. அறிவுக்கு விருந்து ... | 252 |
| 7. தோழர் மறைந்தார் ... | 256 |
| 8. குமரி நாடு ... | 257 |
| 9. மறைந்த வெண்ணிலா ... | 261 |
| 10. குற்றாலப் பவனி ... | 266 |
| 11. அமித போகம் ... | 269 |
| 12. தலைவிதி, சிவராமன் | 270, 274 |
| 13. விளங்குகிறதா? ... | 278 |
| 14. ஜ்யோதிஷ பல ரஹஸ்யம் ... | 281 |
| 15. "எனக்கல்ல, பிறர்க்கே" ... | 283 |
| 16. வார்த்திபேதி, பஞ்சாங்கம் | 284, 288 |








... ... 1—0—0

... ... 1—4—0

...ஹனு?, ...மெசபே... ...கப்பூர் தென் ஆப்ரிக்கா, பர்மா, ...யா முதலிய வெளிநாடுகளுக்கு } 2—0—0

...டந்துகொண்டிருக்கிற ...ந்திய தனிச் சஞ்சிகை விலை 0—2—0

சென்ற வருடங்களின் ...சிகை விலை 0—3—

ஒரு வது ...றந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதா... ...றவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி ...னுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னாடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப் பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

(3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 8-அணாவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணா, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணா சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே நலம், இதைக் கவனிக்கவும்

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம் மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, ராஜாங்க விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாக வும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription / ஜீவிய சந்தா | இந்தியா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | பர்மா, முதலிய வெளிநாடுகளுக்கு | ,, | 25—0—0 |


Telephone No. 3005. Telegram :—"Ananda Bodhini", Madras.
விலாசம்:—கா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"
6, ...சின்னதம்பி முதலி தெரு. தபால் பெட்டி நெ. 167, ...



உ
ஓம்
பரப்பிரஹ்மணே நமஃ


# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.


(ALL RIGHTS RESERVED.)



| | | |
|---|---|---|
| தொகுதி 28 | சித்திரபானுஞு மார்கழிமீ கவ 1942ஞு டிசம்பர்மீ 16உ | பகுதி 6 |


## கடவுள் வணக்கம்.

போற்றி! என் வாழ்முதலாகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற்(கு) இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்(து) எமக்கு அருள்மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
ஏற்றுயர் கொடியுடையாய்! எனையுடையாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (1)


OFFICE OF THE REGISTRAR OF BOOKS 8 JAN 1943 MADRAS


அருணன் இந்திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணல் அங்கண்ணாம்
திரள்நிறை யறுபத(ம்) முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
அருள்நிதி தரவரும் ஆனந்தமலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே! (2)

பூதங்கள் தோறு(ம்) நின்றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப்புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டு அறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கண் முன்வந்து
ஏதங்கள் அறுத்துஅறுத்து எம்மைஆண்டு அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (3)



# சர்வகலாசாலை—ஒரு கலைக் கோயில்

"பொக்கிஷங்களிலும், பாங்கிகளிலும் சேர்த்துவைக்கும் தங்கமும், வெள்ளியும் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளும் ஒரு தேசத்தின் உண்மையான சொத்தல்ல. அத்தேசத்தினருடைய தேக பலமும் மூளை பலமுமே உண்மையான சொத்தாகும். அறிவைப் பரப்புவதே நாட்டில் சிறந்த தொழில்......தற்காலத்தில் முதலாளி, தொழிலாளி. சமதர்மம், முக்கியத் தொழிற்சாலைகள் என்றெல்லாம் பேசுகிறார்கள். ஆனால், நான் என்னவோ நாட்டு மக்களின் அறிவு பலத்தையும், உடல் பலத்தையுமே தங்கம், வெள்ளியைவிட உயர்ந்த சொத்தெனக் கருதுகிறேன்" என்று ஸர். ஸி. வி. ராமன் சமீபத்தில் சென்னைமா நகரில் நடந்த சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவின்போது செய்த பட்டமளிப்புப் பிரசங்கத்தில் குறிப்பிட்டுப் பேசினார்.

நம் மூதறிஞர்கள் செல்வத்தை இருவிதமாகப் பிரித்து வைத்தார்கள், கல்விச் செல்வம், பொருட் செல்வமென்று. கேவலம் பொருட் செல்வத்தை விட, கல்விச் செல்வத்துக்கே அவர்கள் பெருமை யளித்துப் பேசினார்கள். கல்விச் செல்வத்தையே உலக செல்வங்கள் அனைத்திலும் உயர்ந்ததெனக் கருதினார்கள். ஏனென்றால், கல்விச் செல்வம் மட்டும் ஒருவர்க்கு இருந்தால், வெறும் பொருட்செல்வம் மட்டுமல்ல, உலகிலுள்ள சகல செல்வங்களையும் நலன்களையும் பெறக்கூடும் என்ற உண்மையை அவர்கள் அநுபவத்தில் அறிந்து வைத்திருந்தார்கள். மூளை பலம், அறிவுவிளக்கம், கல்விச் செல்வம் என்றவுடனே நம் நாட்டிலுள்ள பெரும்பாலார் பள்ளிப்படிப்பும் ஏட்டுக் கல்வியுந் தான் எனக் கருதி விடுகின்றனர். ஏட்டுக்கல்வி மட்டுமல்ல; வாழ்க்கைக்குப் பயன் படுவதான தொழிற்கல்வி முதலியனவும் கல்விச் செல்வமாகும். ஆகவே, மக்கள் அவைகளையுங் கற்றுப் பெரும்பயன் பெறவேண்டும். இதை வற்புறுத்தவே, ஸர். ராமன், "வெறும்



பள்ளிப்படிப்பிலேயே கவனஞ் செலுத்தும் மனோபாவம் எனக்கில்லை. இயந்திர சாதனக் கல்வியும், இரஸாயனம், பௌதிகம் மு லான கல்வியும் ஒன்றுக்கொன்று சம அந்தஸ்துடன், கைகோ ச் செல்வதே நற்பயனேற்பட வழி. ரஸாயனம் முதலியவைப றி, இயந்திர சாதனக்கல்வி மட்டுமோ, இதற்கு நேர் மாறாகவோ அபிவிருத்தியாவது கெடுதல் தான்" என்று தாம் மேற்கொண்டுள்ள ரஸாயன ஆராய்ச்சிக்கு ஆக்கந் தேடும் வகையில் பேசி யிருக்கிறார்.

ஆகவே, இத்தகைய கல்விச் செல்வத்தை மக்களுக்கு அளிக்கும் கல்வி நிலையமாகத் தற்போது விளங்கும் சர்வகலாசாலைகளுக்குப் பலம் ஏற்படச் செய்ய வேண்டுமென்று ஸர் ராமன் கூறுவதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? "இந்தியாவின் மற்ற பாகங்களில் கல்வி யபிவிருத்திக்காக ராஷ்பிகாரி கோஷ், ஜம்ஷட் டாட்டா, தாரகநாத் பாலித் முதலிய செல்வர்கள் நன்கொடைகள் அளித்திருப்பதுபோல், நம் நாட்டிலுள்ள செல்வந்தர்களும் கல்வி வளர்ச்சியின் பொருட்டு பெரும் பொருள்களை நன்கொடையாக வழங்கவேண்டும்" என்று அவர் யோசனை கூறியிருக்கிறார்.

ரஸாயன பௌதிகம், பௌதிக ரஸாயனம் முதலிய அடிப்படையான சாஸ்திரங்களில் கல்லூரிகளில் பாடஞ் சொல்லிக் கொடுப்பது தவிர, நமது சர்வகலாசாலை வேறொன்றும் செய்யவில்லை யென்றும், ஆராய்ச்சித் துறையில் அவ்வளவு சரியாக அபிவிருத்தியில்லை யென்றும், இக்குறையை நிறைவாக்கவேண்டுமென்றால், சர்வகலாசாலைகளின் வளர்ச்சிக்கு நம் நாட்டுச் செல்வர்கள் பொருளுதவி புரிய வேண்டுமென்றும், பெரும் பொருள் செலவு செய்து நம்மவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று படிப்பதனால், ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் செலவாகிறது என்றும், இதில் பாதித் தொகை இருந்தால்கூட, நமது சர்வகலாசாலைகளை அபிவிருத்தி செய்யலாமென்றும் ஸர். ராமன் வருத்தத்துடன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

கல்வி வளர்ச்சிக்கும் கல்வி நிலையங்களான சர்வகலாசாலைகளின் முன்னேற்றத்துக்கும் ஸர். ராமன் நம் நாட்டுச் செல்வர்களை உதவச் சொல்லுகிறார். இந்து சமயப் பாதுகாப்புக் கழகத் தலைவரான ஸ்ரீ. டி. எம். நாராயணசாமி பிள்ளையோ கோயில்கள் விஞ்ஞானக் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்கிறார். ஏனென்றால் நம் நாட்டுக் கோயில்களிலும் மடங்களிலும் ஏராளமான சொத்திருக்கிறது. ஆகவே, அவை முனைந்தால் மக்களுக்கு எப்பேர்ப்பட்ட கல்வி யறிவையும் ஏற்படுத்த முடியும். இதற்காகத் தனிப்பட்ட நபர்களை எதிர்பார்க்க வேண்டிய

# ‘ஆனந்தபோதினி பஞ்சாங்க’ வழக்கு

நமது காரியாலயத்தில் சுமார் 22-வருஷ காலமாக வெளியிடப்பட்டு வரும் “ஆனந்தபோதினி சுத்த திருக்கணிதப் பஞ்சாங்க”த்தின் காபிரைட் விஷயமாக, சென்னை ஹைகோர்ட்டில் கனம் ஜஸ்டிஸ் பெல் அவர்கள் முன்பாக, சமீபத்தில் ஒரு வழக்கு நடைபெற்று வந்தது வாசக நேயர்களுக்குத் தெரிந்திருக்கு மென்று நம்புகிறோம்.

வழக்கின் விவர மென்னவென்றால், ஸ்ரீ ஸி. கோவிந்தராஜு முதலியார் என்பவரும், மற்றும் மூவரும் சேர்ந்து நமது ‘ஆனந்தபோதினி பஞ்சாங்க’த்தைப் போன்று அதே வர்ண மேலட்டையுடனும் பொருளடக்கத்துடனும் விஷய அமைப்புடனும், மேலட்டையில் ஸி. ஜி. ராஜன் பி. ஏ. (மாதமாடிக்ஸ்) என்ற பெயருடனும் வாக்கியம், திருக்கணிதம் ஆகிய இருவிதப் பஞ்சாங்கங்களை வெளியிட்டதால், நமது உரிமையாளரான ஸ்ரீ நா. முனிசாமி முதலியார் மேற்குறித்த நால்வர் மீதும் ஐகோர்ட்டில் வழக்கு தொடுத்து, முதலில் பிரதிவாதிகள் வெளியிட்டிருந்த இரு பஞ்சாங்கங்களையும் விற்பனை செய்யக் கூடாதென நிரந்தர தடை போடவேண்டுமென விண்ணப்பித் திருந்தார். கனம் பெல் இம் மனுவையேற்று, முதலில் தற்காலிகத் தடை யுத்தரவு விதித்துப் பின் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். விசாரணையின் போது, ஸி. ஜி. ராஜன் பி. ஏ., (மாதமாடிக்ஸ்) என்ற பெயரைச் சிருஷ்டித்தது தாம்தானென்றும், தாமும் மற்றும் சில ஜோதிட நிபுணர்களும் சேர்ந்து வெளியிட்டுவரும் ‘ஆனந்தபோதினி பஞ்சாங்கத்’துக்கு முதல் பிரதிவாதியும் சில குறிப்புக்களைத் தயாரித்து கொடுத்துத் தமக்கு உரிமைப்படுத்தி யிருப்பதாகவும், 1921-ம் ஆண்டி லிருந்து முதல் பிரதிவாதியின் மேற்குறித்த குறிப்புகளுடன் தாம் ‘ஆனந்தபோதினி பஞ்சாங்கத்’தைப் பிரசுரித்து வந்திருப்பதாகவும் அவ்விதம் வெளியிடப்பட்டு வரும் தம் பஞ்சாங்கத்தில் உள்ள பல விஷயங்களைப் பிரதிவாதி அப்படியே காப்பியடித் திருக்கிறாரென்றும் அதனால் தமது வியாபாரத்தில் பெரு நஷ்டம் ஏற்பட் டிருப்பதாகவும் வாதி சார்பில் கூறப்பட்டது. நீதிபதி வாதி வக்கீல் குறிப்பிட்ட நியாயங்களை யேற்று, ‘ஆனந்தபோதினி பஞ்சாங்கத்’துக்கு வாதி தான் உரிமையாளரென்றும் பிரதிவாதி வாதியின் பஞ்சாங்கத்தில் உள்ள பல விஷயங்களையோ அல்லது எல்லா விஷயங்களையுமோ காப்பி யடித்துள்ளார் என்றும், அதனால் வாதியை ஏமாற்றியதாகக் கருதப் படுகிறதென்றும் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்து, ஆதலால், பிரதி வாதிகள் வாதிக்கு மூவாயிரம் ரூபாய் நஷ்ட ஈடும் கோர்ட்டு செலவுத் தொகையும் செலுத்த வேண்டுமென்று 24-11-42 அன்று தீர்ப்பளித்தார்.

# தமிழ்மறை அருளிய தெய்வம்

(“மைவண்ணன்”)

“காதல! இன்னும் எவ்வளவுதூரம் இருக்கிறது, என் அப்பன் திருக்கோயில்? வழி நீளப் போய்க்கொண்டே இருக்கிறதே! மழையோ ‘சோ’வென்று பெய்கிறது! சாரல் அடிக்குமென்று இரு பக்கமும் திரை தொங்கவிடப்பட்டிருப்பதால், எந்த இடத்துக்கு வந்திருக்கிறோமென்றுந் தெரியவில்லை. ‘ஸ்கிரீனை’யாயினுஞ் சற்று தூக்குங்களேன், பார்ப்போம்......” என்று கூறினாள் மங்கையர்க்கரசி.

“ஆயிற்று. இன்னுங் கொஞ்சந் தூரந்தானிருக்கும், கண்ணே! நீ என்ன, இப்படி துடிதுடிக்கிறாயே! நாம் போவதற்குள் ஐயனை யாரேனும் எடுத்துக்கொண்டு போய்விடுவார்களென்றா அஞ்சுகிறாய்? அப்படி யெல்லாம் ஒன்றும் நடந்துவிடாது. அமைதியாக வா” என்று புன்முறுவலுடன் கூறியவாறே நான் திரையைச் சிறிது நீக்கி வெளி நோக்கினேன். அதற்குள் மழைச்சாரல் படபடவென்று அடித்து என்னைத் திணற வைத்தது.

“அதற்கில்லை; நாதா! தமிழ்மறை தந்த வள்ளலைப்பற்றி நீங்கள் சொல்லியதிலிருந்து, அப் பெருமானின் திருவுருவத்தையும் திருக்கோயிலையும் கண்டு களிக்க வேண்டுமென்று என் நெஞ்சம் நினைத்துத் துள்ளிக்கொண்டு இருக்கிறது; அது மட்டுமல்ல; என் கண்களுந் தினவெடுத்துக் கொண்டிருக்கின்றன.—இது வரைதான், நான் மேனாட்டுக்கல்வி மீதிருந்த மோகத்தால், தமிழ்ப்பெரும் புலவர்களை அலட்சியமாக நினைத்திருந்தேன். இப்போதாயினும் எம்பெருமானை.........” என்று மங்கையர்க்கரசி கூறி வருவதற்குள், நான் மீண்டும் வெளியே பார்த்து, “இதோ வந்துவிட்டோம், அரசி! .........” என்று மகிழ்ச்சியோடு கூறினேன்.

இதற்குள் காரும் நின்றது. டிரைவர் இறங்கிவந்து கதவைத் திறந்துவிட்டான். மங்கையர்க்கரசி அளவிட முடியாத ஆனந்தத்தோடு காரினின்றும் வெளியே குதித்தாள். அவளைப் பின்தொடர்ந்து நானும் கீழே இறங்கினேன்.

“அரசி, இதோ பார்! நீ காண விழைந்த நின்ற திருவள்ளுவர் பெருமான் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயில் இதுதான்.........” என்று எங்களுக்கு எதிரில் தோன்றிய கோயிலைச் சுட்டிக் காட்டினேன் நான்.

“இதுவா?” என்று திகைப்போடு கேட்டாள் மங்கையர்க்கரசி.

“ஆம். வா; உள்ளே போவோம்; வா” என்று கூறி நான் அவளை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றேன்.

அங்கே ஜன நடமாட்டமேயில்லை. இதுவும் ஒரு கோயில்தான் என்று பார்ப்பவர்கள் அறிவதற்காக, அக் கோயிலின் வெளி மதிற்சுவர்களின் மீதும் உள் சுவர்களின் மீதும் பட்டை பட்டையாகச் சிவப்புநிறம் பூசப்பட்டிருந்ததைத் தவிர, அது கோயில் என்று சொல்வதற்கு வேறு எவ்விதச் சின்னமுங் காணப்படவில்லை. வெளிமதிலைக் கடந்ததும் உள்ளே இருபது கஜ அகலத்துக்கு இரு புறங்களிலும் மைதானம்போல் புல் வெளி காணப்பட்டது. அவ்விடத்தில் இரண்டொரு பசு மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

காரைவிட்டு இறங்கியதும் உற்சாகமாக எனக்கு முன்னே நடந்த மங்கையர்க்கரசி இப்போது பின் தங்கிவிட்டாள். ஆகவே, நானும் மெள்ள நடக்கத் தொடங்கி அவளைத் திரும்பிப் பார்த்தேன். அவள் முகத்தில் ஏமாற்றமும் துயரமுங் காணப்பட்டன. அவளது சுருங்கிய நெற்றி அவள் ஏதோ சிந்தனையி லிருக்கிறாள் என்பதைக் காட்டியது. அவளது உற்சாகக் குறைவுக்கும் யோசனைக்கும் உரிய காரணம் என்ன என்பதை என்னால் அறியக்கூடவில்லை.

இந்நிலையில் நாங்கள் கோபுர வாயிலை (அது சாதாரண வாயிலா யிருந்தாலும் கோபுர வாயில் என்றுதான் சொல்லவேண்டும்) யடைந்தோம். நாங்கள் கோபுர வாயிலில் அடியெடுத்து வைத்த அதே சமயம், உள்ளிருந்து மணியோசை கேட்டது. ஓசை யெழுந்த திசையை நோக்கியதில், திருவள்ளுவ நாயனாருக்கு அந்தி கால பூசை நடந்து கொண்டிருப்பதாகத் தெரிந்தது. கோயில் மணியின் ‘கண கண’ வென்ற ஒலி எங்களை நல்வரவேற்பதுபோல் தோன்றியது. ஆராதனை செய்யப்பட்ட தீபத்தின் ஒளி, சோதி தரிசனம்போல் எங்கள் கண்களையும் உள்ளங்களையும் ஒருங்கே கவர்ந்தது. ஆகவே, நான் கோபுர வாயிலண்டை நின்றவாறே உச்சிமேல் கரங் கூப்பிக் கும்பிட்டேன். மங்கையர்க்கரசியும் கைகூப்பி வணங்கினாள்

“அரசி! நாம் நல்ல சமயத்தில்தான் வந்தோம். வா; முதலில் நாம் கோயிலை வலம்வந்து விட்டுப் பின்னர் நமது தமிழ்த் தெய்வத்தைப் போய்த் தரிசிப்போம்” என்று என் ஆருயிர்த்துணைவியை அழைத்துக்கொண்டு கோயிலினுள் நுழைந்தேன். முன் பக்கமெல்லாம் கொன்றைப்பூ, அரளி முதலிய பலவிதமான பூஞ்செடிகளும் கொடிகளும் மரங்களும் அடர்ந்து படர்ந்து வளர்ந்திருந்தன. ‘விர் விர்’ என வீசிக்கொண்டிருந்த குளிர் காற்றினால் அவை ஆடிக் கொண்டிருந்ததும், இலைகளிலும் மலர்களிலும் தங்கியிருந்த மழைத் தண்ணீர்த்துளிகள் எங்கள் மீது துளிர்த்ததும், ‘வாருங்கள்; வாருங்கள்; தமிழ் மறை தந்த வள்ளுவர் பெருமானை வணங்கி அருள் பெற்றுச் செல்ல வாருங்கள்’ என்று எங்களைக் கைகாட்டி யழைத்து பன்னீர் தெளித்து வரவேற்று உபசரிப்பது போல் இருந்தது.

நாங்கள் துவஜ ஸ்தம்பத் தண்டை வந்ததும், மீண்டும் ஒரு முறை கருப்ப கிருகத்தை நோக்கிக் கைகூப்பி வணங்கினோம். பின்னர், இடது புறமாகத் திரும்பிக் கோயிலை வலம் வரலானோம். சிறிது தூரஞ் சென்றதும் தென்கோடியில் ஒரு சிறுகோயில் இருந்தது. “அரசி, இதுதான் திருவள்ளுவ நாயனார் வழிபட்டு வந்த சிவலிங்கம் என்று சொல்லப்படுகிறது” என்று நான் கூறி மங்கையர்க்கரசியைக் கூட்டிக்கொண்டு அதனுள் நுழைந்து சிவலிங்கத்தைத் தரிசனஞ் செய்து வைத்தேன்.

அதன்பின்னர், நாங்கள் கோயில் பின்புறத்தைச் சுற்றிக்கொண்டு வந்தோம். கோயிலுக்கு வருவார் நடப்பதற்குச் சௌகரியமாகத் தரையில் பதிக்கப்பட்டிருந்த கடப்பைக் (கருங்)கல் பாதை தவிர, மற்ற இடங்களி லெல்லாம் பல வகைப்பட்ட புற்பூண்டுகள் முளைத்து தாறுமாறாகக் காணப்பட்டன. அதுவன்றி, நெருஞ்சி முட்கள் எங்கு பார்த்தாலும் கிடந்தன. ஆகவே, நான் கடப்பைக் கல் பாதை யில்லாத புற்றரையில் பார்த்துக் காலெடுத்து வைத்து நடந்து வருமாறு மங்கையர்க் கரசிக்கு எச்சரிக்கை கூறிக்கொண்டு முன்னதாக நடந்து சென்றேன்.



நாங்கள் திருவள்ளுவர் கோயில் பின்புறத்தைச் சுற்றிக்கொண்டு கிழக்குக் கோடியாகத் திரும்புகையில் அங்கே ஒரு சிறுகோயில் காணப்பட்டது. அதைப் பார்த்ததும் மங்கையர்க்கரசி, “காதல, இது என்ன கோயில்?” என்று கேட்டாள்.

“நீ தான் சொல்லேன்; பார்ப்போம்! கோயிலின் முன்போய் உள்ளிருக்கும் சிலா விக்கிரகத்தைப் பார்த்தால் தெரிகிறது” என்று புன்முறுவலோடு கூறினேன்.

எனவே, மங்கையர்க்கரசி எனக்கு முன்னே நடந்து அக் கோயிலின் முன் நின்று உள்ளிருக்கும் விக்கிரகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, “இது அம்மன் சந்நிதி யல்லவா! அப்படியானால், வாசுகியம்மையா?......” என்று இழுத்தாற்போல் கேட்டாள்.

“ஆம்; திருவள்ளுவரது வாழ்க்கைத் துணைவியாரான வாசுகி தேவியார்தான்........” என்று பதிலளித்தேன் நான்.

பின்னர், இருவரும் வாசுகியம்மையாரைக் கண்ணாரக் கண்டு களித்து அஞ்சலி செய்தோம். அதன்பின் நாங்கள் அவ்விடத்தி னின்றும் நீங்கி, திருவள்ளுவர் பெருமான் சந்நிதியை நோக்கி நடந்தோம். கோயில் மண்டபத்தை அணுகும் இடத்தில் ஒரு பெரிய கிணறு இருந்தது. சுமார் 30 வயதுள்ள ஒரு மங்கை அக் கிணற்றிலிருந்து தண்ணீர் முகந்து கொண்டிருந்தாள். இக் கிணற்றுநீர் தான் சுவாமி அபிஷேகம் முதலிய காரியங்களுக்கு உபயோகப்பட்டு வருவதாகத் தெரிந்தது.

நாங்கள் மீண்டும் பலி பீடத்தை யடைந்து மண்டபத்தினுள் நுழைந்து, கடைசியாக, திருவள்ளுவர் சந்நிதியை யடைந்தோம். மண்டபத்தின் தூண்களில் திருவள்ளுவ நாயனார் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவைகளை யெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு, நாங்கள் கருப்பக்கிருகத்தை யணுகினோம். கருப்பக்கிருகத்தின் வெளிவாயிலில் இடது புறத்தில் ஒரு பெரிய மாடத்தில் விநாயகமூர்த்தி வீற்றிருந்தார். மற்றும் சுவரில் அமைக்கப்பட்டிருந்த மாடங்களில் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்ததால், பார்ப்பதற்கு அழகா யிருந்தது. தீப வரிசைகளினூடே நாயனாரது திருவுருவம் உள்ளிருந்து திகழ்ந்தது, அருக்கனின் ஆயிரங் கதிர்களி னிடையே இறைவன் ஒளிபெற்று விளங்குவதுபோல் இருந்தது.

உள்ளமும் உடம்பும் பக்திப் பெருக்கால் பரவசமடைய நான் மங்கையர்க்கரசியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு திருவள்ளுவர் திருமுன்னர் சென்றேன். நாங்கள் கோயிலை வலம் வருவதற்குள், அந்திகால பூசையை முடித்துக்கொண்டு அப்போதே கருப்பகிருகத்தை விட்டு வெளி வந்து கொண்டிருந்த பண்டாரம், எங்கள் வருகையைக் கண்டதும், “வாங்க; உள்ளே வாங்க. இப்போதான் தீபாராதனை யெல்லாம் ஆச்சி. இருந்தாலும் பரவாயில்லை. இப்பிடி வந்து நில்லுங்க. இதோ ஒரு நொடியிலே வந்துடுறேன்” என்று கூறிவிட்டு, ஒரு நீண்ட விசிப்பலகையின் மீது வைக்கப்பட்டிருந்த தாம்பாள மொன்றை எடுத்து அதில் ஒரு கர்ப்பூரக்கட்டியை வைத்துக் கொளுத்தி, “சுவாமி தரிசனஞ் செய்யுங்க” என்று சொல்லியவாறு மீண்டும் தீபாராதனை செய்யலானான். நாங்கள்

“சிவசிவ சிவா!” என்று மெள்ள உச்சரித்தவாறு வள்ளுவர் பெருமானைக் கரங்கூப்பி வணங்கினோம்.

அதன் பின்னர் அப் பண்டாரம், கர்ப்பூரத்தட்டை யெடுத்துக் கொண்டு, கருப்பக் கிருகத்தைவிட்டு வெளியேறி, “வாங்க, உள்ளே வாங்க. இதோ உற்சவ மூர்த்திகளைப் பாருங்கள். வலப் பக்கத்திலே இருப்பதுதான் சுவாமி விக்கிரகம். இடது புறத்தி லிருக்கிறதுதான் அம்மனின் சிலை” என்று கூறிக் காட்டியவாறு அவ் விக்கிரகங்களின் முன் எரிந்து கொண்டிருந்த விளக்குகளைத் தூண்டிவிட்டு மற்றொரு கர்ப்பூரக்கட்டியை வைத்து ஏற்றி இரண்டுக்கும் தீபாராதனை செய்தான். பிறகு அவன் கர்ப்பூரத்தட்டை எங்கள் முன் நீட்டினான். நாங்கள் எரியும் கர்ப்பூரப் பிழம்புக்கு மேல் கரங்களை நீட்டிக் கண்களில் ஒற்றிக்கொண்டோம். நான் சட்டைப்பையிலிருந்து ஒரு கால் ரூபாயை எடுத்துக் கர்ப்பூரத்தட்டில் போட்டேன். பண்டாரம் அளவிலா மகிழ்ச்சியோடு கர்ப்பூரத்தட்டைக் கொண்டு போய் வைத்துவிட்டு விபூதிமடலை யெடுத்துவந்து எங்களிடம் நீட்டினான். நாங்கள் விபூதியை எடுத்து நெற்றியில் பூசி அதன் மீது குங்குமத்தை விட்டுக் கொண்டோம்.

பின் நான் பண்டாரத்தை நோக்கி, “ஐயா, நாங்கள் சுவாமி சந்நிதியில் இன்னுஞ் சிறிதுநேரம் இருந்து கண்களாரத் தரிசித்துவிட்டு வருகிறோம்” என்று கூறினேன்.

“ஆகா, தாராளமா இருந்து பாத்துட்டு வாங்க. நான் வெளியே போயிருக்கிறேன்” என்று கூறியவாறு, அங்குள்ள விளக்குகளை யெல்லாம் பிரகாசமாக எரியுமாறு தூண்டி விட்டுவிட்டு எங்களை ஏகாந்தமாக இருக்க விட்டு வெளியே மண்டபத்துக்குப் போனான். அதன் பின்னர், வாசுகியம்மையார் விக்கிரகம் இருந்த பக்கமாக மங்கையர்க்கரசியும், வள்ளுவர் விக்கிரகம் இருந்த பக்கமாக நானும் நேருக்குநேர் நின்று கருப்பக்கிருகத்தில் எழுந்தருளி யிருக்கும் தெய்வப்புலவரை நோக்கியவாறு மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்கலானோம்.

“திருமுடி மிசையார் மயிர்முடி யழகும்
தீர்க்கபுண் டரநுதல் அழகும்
திரண்மணி புயந்தை வருஞ்செவி யழகும்
திகழ்நெடுந் தாடியின் அழகும்
அருமுடி செபமா லிகைசின்முத் திரைசேர்
அபயநேர் வலக்கையின் அழகும்
அமிழ்துஉறழ் தமிழ்மா மறை
அமைதரும் இடக்கையின் அழகும்
கருமுடி யோகப் பட்டையின் அழகும்
கடிகொள்கீட் கோவண அழகும்
கழல்களிற் கிகிரி வளைவரை அழகும்
கமலநல் ஆதனத்(து) அழகும்

(255-ம் பக்கம் பார்க்க.)

# வார்தா நினைவுகள்

(“சழகத்தொண்டன்”)

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

ஆசிரமத்திற்கென்று ஒரு தபாலாபீஸும், ஆரம்பப் பள்ளியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. சத்தியவரதன், எனக்கு ஆசிரமக் காரியதரிசியை அறிமுகம் செய்வதாய்ச் சொன்னார். அடுத்தநாள் காலையில் ஆசிரமக் காரியாலயத்தின் அறை ஒன்றில் நுழைந்தோம். அங்கே கம்பளி விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் புத்தகங்களும், கடிதங்களும் கிடந்தன, அவைகளுக்கிடையில் ஒருவர் அமர்ந்து இராட்டை சுற்றிக் கொண்டிருந்தார். நான் “நமஸ்தே” என்று கூறி முடிக்கு முன், அவரும் பதில் கூறி கம்பளியில் அமரும்படி இட மளித்தார். அவருடைய நீண்ட தாடியைக் காணும்போதே எனக்கு, அவர்பால் ஒரு பெருமித வுணர்ச்சி தோன்றிற்று. எலும்பு எத்தனை யென்று எண்ணிக் கொள்ளலாம்போல் அவ்வளவு மெலிந்திருந்தது அவர் உடல். ஆசிரமத்தில், ஆச்சார்யா விநோபா முதல் எல்லோருமே மெலிந்திருப்பதைக் காணுந்தோறும் தாயகத்தின் தியாக வேள்வியிலேயே, தங்கள் உடம்பைக் கரைத்து வருகிறார்களோ வென்றுதான் அதிசயிக்க வேண்டி யிருக்கிறது. அன்னை பாரத தேவியைப் பிணித்துள்ள அன்னியர் தளைகளை யெல்லாம் அறுத்தெறியப் பிறந்திருப்பவர்களன்றோ அந்த தியாக மணிகள்!

இந்த தாடிக்காரர்தான் ஆசிரமக் காரியாலயத்தின் செயலாளர். இவர் பேர், சதாசிவ காத்ரே என்பது. நாகபுரி கல்லூரியில் ஆசிரியர் பதவி வகித்து, சென்ற உப்பு சத்தியாக்ரஹத்தின்போது சிறை புகுந்து விடுதலையானவர். பல்லாயிரக்கணக்கில் மதிப்புடைய சொத்துக்களை யெல்லாம் தருமத்திற்கு வழங்கி, ஆசிரமம் புகுந்து பணியாற்றுபவர். இவ்வாறு எம்மருங்கும் தியாகத்தின் கதிர்விரித்து ஒளிர்கின்றது நால்வாடி ஆசிரமம்.

## ஆசிரம விருந்து

யான் விநோபாவின் விருப்பம்போல் இராட்டை பழகுவதாய்த் தீர்மானித்து, அதற்கான கட்டணத்தை காரியாலயத்தில் செலுத்தி விட்டேன். ஆனால் அடுத்தபடியாய் நின்ற பிரச்சினை சோற்றைப்பற்றிய தாகும். இதையறிந்த திரு. காத்ரே “உணவிற்கு ஏற்பாடு செய்யும் வரை ஆசிரம விருந்தாக விருக்கும்படி” என்னை அன்புடன் வேண்டினார். யானும் உடன்பட்டேன். ஆனால், அந்தப் பத்தியச்சோறு எனக்குப் பிடிப்பதாயில்லை. அப்படியும் இரண்டு நாட்கள், எப்படியோ தள்ளித் தொலைத்தேன். அதற்குள்ளேயே அங்கு உண்ண என் மனம் நடுங்கிற்று. கடும் பத்தியத்தை ஆசிரம வாழ்விலுள்ள வீரத் தியாகிகள் தான் சகிக்க முடியும் என்று தீர்மானித்து, காரியதரிசி காத்ரேவுக்கு ஒரு “நமஸ்தே” சமர்ப்பித்துவிட்டு, வெளிப் போந்து வேறு ஏற்பாடு செய்து கொண்டேன்.

(தொடரும்.)

# அறிவுக்கு விருந்து

## பௌதிக நூல் (இரண்டாம் புத்தகம்.)

[ஆசிரியர்கள் : ஸ்ரீ ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., ஸ்ரீ. வி. இராமசாமி, பி. எஸ். ஸி., (ஆனர்ஸ்), வெளியிட்டோர் : அண்ணாமலை சர்வகலாசாலையார், அண்ணாமலை நகர்.]

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று புதுமைக் கவி பாரதியார் தமிழ் மொழிப் புலமையோடு ஆங்கிலம் முதலிய பிற மொழிகளின் பயிற்சியும் வாய்ந்த அறிஞர்களுக்கு அறிவுறுத்திச் சென்றார். ஆம்; இன்றைய தமிழக மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இக் கலைத் தொண்டு இன்றியமையாத தொன்றாகும். எவ் விஷயங்களையும் தாய் மொழி மூலம் புகட்டினால் தான், மக்கள் எளிதாக அறிவு வளர்ச்சி பெற முடியும். மனித சமூகத்துக்குப் பெரும் பயன் ஏற்படும்.

இவ் வுண்மையை, நம் நாட்டில் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் பலர் உணரத் தொடங்கியதன் பயனாக, சமீப காலத்திலிருந்து ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்தரக் கலாசாலைகளிலும் ஆங்கிலம் நீங்கலாக, மற்றெல்லாப் பாடங்களுமே தமிழ் மொழியில் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. சர்வ கலாசாலைகளும் இந்த அத்தியாவசியத்தை யுணர்ந்து, அதற்கான முயற்சியைச் செய்து வருகின்றன. இதற்கு அவ்வப்போது சென்னை சர்வகலாசாலையும், அண்ணாமலை சர்வ கலாசாலையும் வெளியிட்டு வரும் ரசாயன, விஞ்ஞான நூல்களே போதிய சான்றாகும். இவ்வகையில் இண்டர்மீடியட் வகுப்பு மாணவர்களுக்கென வெளி வந்திருக்கும் மேற்படி பௌதிக நூலை, தமிழ் மொழி யாக்கத்தில் கருத்துடைய யாரும் வரவேற்பர் என்பது திண்ணம். இந் நூலின் முதற் பாகம் 1941-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அதில் பௌதிக அறிவுக்கு வேண்டிய பூர்வாங்கமான விஷயங்கள் அனைத்தும் ஒருவாறு விவரிக்கப்பட்டிருந்தது. மேலும், இயந்திர இயல், நீர்நிலை இயல், வெப்ப இயல் ஆகியன விளக்கப்பட் டிருந்தன.

இந்த இரண்டாவது பாகத்தில் முன்னதைத் தொடர்ந்து, ஒளி இயல், ஒலி இயல், காந்த இயல், மின்சார இயல் ஆகியவைபற்றி விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மாணவர்களும் மற்றையோரும் எளிதாகப் படித்துணரும் வண்ணம் மொழி மரபுக்கு ஒத்த நடையில் எழுதாதது வருந்தத் தக்கது. பிற மொழிகளி னின்றும் அறிந்தவற்றை, தாய் மொழியில் தர முயலும் போது, அம் மொழியின் இயற்கையை அநுசரித்து விரித்தால் தான் பொருத்தமாகவும், சுலபமாகப் புரியக்கூடியதாகவும் இருக்கும். அதாவது ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் படித்து அறிந்த விஷயங்களை, தமிழ் மொழியில் தர முனைகையில், மேற்படி பிற மொழி அறிவை அறவே விட்டு, அதன் மூலம் பெற்ற கருத்துக்களை—நுட்பங்களை மட்டும் மேற்படி தமிழ் மொழி இயற்கையில் தர முயற்சித்தால் தான் கருதிய பயனை வெற்றிகரமாகத் தரும். இந் நூலில் பௌதிக சம்பந்தமான பரி



பாஷைப் பதங்களுக்குப் பிரயோகித்திருக்கும் தமிழ்ச்சொற்கள் பெரும்பாலானவை வழக்கி லில்லாத வேத லிபி போன்று இருக்கின்றன. இப்படிப் பிரயோகிக்கப்பட்ட பரிபாஷைப் பதங்களுடன் அததற்குரிய ஆங்கில வார்த்தைகளை வளைவுக் கோடுகளுக்குள் கொடுத் திருந்தாலாயினும் படிப்பவர்களுக்குச் சிறிது உதவியாக இருக்கக்கூடும். சொல் அகராதி (glossary) மட்டும் ஒரு பகுதியில் தந்திருப்பது போதிதாக இருக்காதென்று நாம் கருதுகிறோம். பிற் பகுதிகள் முழுவதிலும் உதாரண விளக்கங்களுக்கு ஆங்கில எழுத்துக்கள் கையாளப் பெற்றிருக்கையில் நாம் கூறுகிறபடி, தமிழில் உபயோகிக்கும் பரிபாஷைப் பதங்களுடன் ஆங்கிலச் சொற்களைச் சேர்த்து வெளியிடுவதற்கு ஆசிரியர்களுக்கு ஆட்சேப மிராது என்று நம்புகிறோம்.

## ஒரு துறைக் கோவை

[இயற்றியவர்:—அமிர்த கவிராயர், பதிப் பாசிரியர், ஏ. சொக்கலிங்கம் பிள்ளை, 15, ஷண்முகராயன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை. விலை. ரூ. 1—12—0.]

காதலன் காதலியர் இடையே நிகழும் காதல் நிலைகளை விரிக்கும் சித்திரங்கள் தாம் 'அகப்பொருள் நூற்கள்' ஆகும். அகப் பொருள் துறை என்பது உலகிலுள்ள பிற மொழிகளில் இல்லாத தொன்றாகும். நம் தமிழ் மொழிக்கே சிறப்பாக உரியதாகும்.

இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம் (அகத்திணை) போன்ற உயர்ந்த நூல்களில் இலக்கணம் கூறப்பட்ட அகப்பொருள் பின்னர் சங்கப் புலவர்களால் தனித் தனி பாடல்களில் இடம் பெற்றது. அக நானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை முதலிய சங்க நூல்கள் அன்பின் ஐந்திணையான அகப்பொருளின் சிறப்பை விளக்குவதற்கே எழுந்தனவாகும். பிற்காலத்தில் அகப்பொருள் துறைகள் கோவை வடிவில் வெளிவந்தன. ஓதுவார் உள்ளத்தை உருக்குந் தன்மை வாய்ந்ததாகிய 'திருவாசகத்'தை யருளிய மாணிக்கவாசகப் பெருந்தகையாரும் நாயக நாயகி பாவத்தில் கடவுளைப் பாடி மகிழ, அகப்பொருட் கோவையைக் கையாண்டு உலக இன்பத்தை வெளிப்படைப் பொருளாலும் கடவுள் இன்பத்தைக் குறிப்புப் பொருளாலும் விளக்கி திருச்சிற்றம்பலக் கோவையார் என்ற பெயரோடு ஒரு நூல் இயற்றினாரென்றால், அகப்பொருளின் சிறப்பை என்னென்பது! ஒவ்வொரு துறையைப் பற்றியும் ஒவ்வொரு பாடலாக நானூறு பாடல்கள் பாடுவது கோவை பாடுவார் வழக்கா யிருந்தது. இடையே முளைத்த ஒரு புலவர் 'நாணிக் கண் புதைத்தல்' என்னும் ஒரு துறையைப் பற்றியே நானூறு பாடல்கள் பாடித் தம் புலமையை வெளிப்படுத்தினார். 'நாணிக் கண் புதைத்தல்' என்னும் ஒரு துறைக் கோவை வந்த வரலாறு ருசிகரமானது. கி. பி. 1645–1670-ம் ஆண்டில் இராமநாதபுரத்தை அரசாண்ட தளவாய் ரகுநாத சேதுபதியின் சமஸ்தானத்தை அலங்கரித்திருந்த வித்வான்களில் இந் நூலாசிரியரான அமிர்த கவிராயர் தலைசிறந்து விளங்கினார். ஒருநாள் மாலையில் சேதுபதி புலவர்களுடன் அரண்மனைப் பூம் பொழிலில் அறிவுக்கு விருந்தாகப் பல பாடல்கள் பாடி அளவளாவிக்

கொண்டிருக்கையில் 'அகப்பொருள்' பற்றிய பேச்சுத் தொடங்கியது. அரசன், புலவர் பெருமக்களை நோக்கி, 'அகப்பொருள்' துறைகளில் ஏதாவதொன்றில் மட்டும் பல பாடல்கள் பாடக்கூடுமோ என்று கேட்டான். அதற்கு அப் புலவருள் சிலர், 'பத்துப் பாடலாம்,' 'இருபது பாடலாம்', 'முப்பது பாடலாம்', 'நாற்பது பாடலாம்,' 'ஐம்பது பாடலாம்' என்றனர். இறுதியில் அமிர்த கவிராயர், 'நான் நூறு பாடல்கள் இயற்றுவேன்' என்றார். உடனே, மற்ற புலவர்கள் இவருடைய சொல்லுக்கு வேறுவிதமாகப் பொருள் கொண்டு, 'நானூறு பாடல்கள் செய்வேன்' என வாதித்தனர். 'என் இதற்கு இவ்வளவு தர்க்கம்? அதையும் ஒரு பக்ஷத்தில் (அதாவது பதினைந்து நாளில்) செய்து முடிப்பேன்' என்று உறுதி கூறினார். மற்றவர்கள் இது நடவாத காரியமென்று அலட்சியமா யிருக்கையில், குறித்த காலத்தில் அமிர்த கவிராயர் 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் ஒரே துறையில் நானூறு பாடல்கள் கட்டளைக் கலித்துறையில் பாடி முடித்து அரசனிடம் சமர்ப்பித்தாராம். இது கண்டு அரசனேயன்றி, புலவர்களும் வியந்து பாராட்டினராம். இக் கோவையில் அமிர்த கவிராயர் முதலிரண்டு அடியில் சேதுபதியின் பெருமையையும், பின்னிரண்டடியில் அகப்பொருளொன்றும் போக்குரையுமாக இரண்டு பொருள் தோன்றும்படி இயற்றி யிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. பொருட் சிறப்பையே உள்ளத்தில் கொண்டு பாடப்பட்ட திருக்கோவை, தஞ்சைவாணன் கோவை, அம்பிகாபதி கோவை முதலியவைகளைப்போ லல்லாது, தம் புலமையைக் காட்ட வேண்டுமென்ற ஒரே நோக்கு கொண்டே இந்த ஒரு துறைக்கோவை பாடப்பட்டிருப்பதால், நானூறு பாடல்களிலும் அகப்பொருளின் இனிமையும் போக்குரையின் நயமும் முழுதும் அமையவில்லை. ஆனால், உள்ளத்தை அள்ளும் பொருட் சிறப்பு வாய்ந்த பாடல்களும், கற்பனை யழகு மிகுந்த பாடல்களும் இதில் இல்லாமலில்லை. கவிராயர் என் நோக்கோடு இக் கோவையைப் பாடினர் என்பதைக் கருத்தில் வைத்துப் படித்தால்தான் இதை ஒருவாறு பாராட்ட முடியும். கோவை நூல்களில் பெரும்பயிற்சி வாய்ந்தவரும், பல சிறு நூல்களுக்கு உரை எழுதிப் பிரபலம் பெற்றிருந்தவருமான இராமாநந்தயோகி இக் கோவைக்கு விளக்கமான ஒரு உரை எழுதி யிருக்கிறார். சேது சமஸ்தான வித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்காரும் சில பாடல்களுக்கு உரை யெழுதி யுதவி யிருப்பதாகத் தெரிகிறது. பதினேழாம் நூற்றாண்டு நூலான இக் கோவையைப் புத்தக வடிவில் கொண்டு வந்த ஸ்ரீ எ. சொக்கலிங்கம் பிள்ளையின் நன்முயற்சியைப் பாராட்டியாயினும், தமிழ்மக்கள் இதை வாங்கிப் படிக்கவேண்டும்.

## திருவகுப்பு விருத்தி யுரை

தமிழ்க்கடவுளான முருகன் திருப்புகழ் பாடி உலக மக்களை உய்வித்த ஸ்ரீ அருணகிரி சுவாமிகள் இயற்றிய பாடல்களில் திருவகுப்பு ஒன்றாகும். இவ் வகுப்பு இருபத்தைந்து பாக்கள் கொண்டது. இவ் இருபத்தைந்தும் 'சீர்பாத வகுப்பு', 'வேல் வகுப்பு', 'சேவகன் வகுப்பு' என மூன்று வகுப்புக்களாக அமைந்திருக்கின்றன. அழியா இன்பமாம் முத்தியின்பம் பயக்கும் திருவடிச் சிறப்பைக் கூறுவது சீர்பாத வகுப்பு என்றும், இடுக்கண் எல்லாம் பொடிபடுத்தி என்னாளும் தக்துதவுவது வேல் வகுப்பு என்றும், இயம பயம் நீக்குவது சேவகன் வகுப்பு என்றும் பெரியார்கள் கூறுகின்றனர். இத்தகைய திருவகுப்புக்களின் பொருட்சிறப்பையும், மெய்ஞ்ஞானத்தையும் அவரவர்கள் அனுபவித்து உணர்ந்து கொள்ளவேண்டுமே யொழிய, பிறர் சொல்லால் சொல்லி அறிவிக்கவோ அறிந்துகொள்ளவோ முடியாது. 'கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாக' வருவதுபோல், வார்த்தையால் உரை செய்து விவரித்தற்கரிய திருவகுப்புக்களுக்கு திருமுருகன் திருவருள் துணை கொண்டு உரைகூற முன்வந்த ஸ்ரீ பு. பா. இரத்தின சபாபதி நாயகர் அவர்களின் நன்முயற்சியை அறிஞர்கள் பாராட்டியே தீரவேண்டும். ஸ்ரீ அருணகிரிநாதர் போன்ற அநுபூதிமான்களின் அருள்மொழியின் உட் கிடக்கையை உள்ளவாறு உணர்வார் இந்நாளில் மிக அரியர். இந்நிலையில் திருவகுப்பை யொத்த ஞானநூல்களுக்கு இயன்றவரை உரை கூறி வருவது காலத்துக்கேற்ற தொண்டாகும். மக்களைத் திருவருள் வழிப்படுத்துவதற்குப் பெருந்துணை செய்யும் இப்பணி, பணி என்பவற்றுளெல்லாம் தலையாயது என்றால் மிகையாகாது. தெய்வத் திருவினை இனிதே விளக்கி நிற்கும் பெற்றியைப் பூரணமாகக் கொண்ட இம்மூன்று திருவகுப்புக்களுக்கு ஸ்ரீ நாயகர் தத்துவக் கண்கொண்டு, அனுபூதிமான்களின் வாக்குகளை மேற்கோளாகக் காட்டிப் பொருள் விளக்கஞ் செய்துள்ளார். இம் முயற்சியை, தமிழுலகம் வரவேற்று, மற்ற வகுப்புகளுக்கும் உரை எழுதுமாறு ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம். பிரதி யொன்றின் விலை அணா 8. இந்நூல் ஆனந்தபோதினி ஆபீஸில் கிடைக்கும்.



---

(250-ம் பக்கத் தொடர்ச்சி.)

தருமுடி முகில்தோய் மயிலையின் இடைமா
    தவர்கள்கண்டு இறைஞ்சவீற் றிருக்கும்
தரைபுகழ்த் திருவள் ளுவர் எனு(ம்) நாம
    சற்குரு சரணமே சரணம்."

என்ற பாவை நான் உருக்கமாகப் பாட, மங்கையர்க்கரசி என்னுடன் சேர்ந்து இனிமை ததும்பப் பாடினாள். துதி பாடி முடிந்ததும், நான் பொய்யில் புலவன் பொன்னடிகளில் சர்வாங்கங்களும் நிலத்தில் பொருந்த வீழ்ந்து வணங்கினேன். மங்கையர்க்கரசியும் முழந்தாளிட்டு முடியுறக் குனிந்து வணங்கினாள். பின்னர் இருவரும் எழுந்து மாதாநுபங்கியின் மலரடிகளில் மனதைப் பதித்து சிறிதுநேரம் அமைதியாக இருந்தோம். இந்நிலையில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்தோம் என்று சொல்ல முடியாது. வெளியே ஏதோ அரவ முண்டானதால் உணர்வுபெற்ற நான் மங்கையர்க்கரசியை அழைத்துக்கொண்டு மண்டபத்தை யடைந்தேன். வெளிவருகையில் தற்செயலாக மங்கையர்க்கரசியின் முகத்தை நோக்கிய நான் அவளது கண்களில் நீர் ததும்பி வழிவதைக் கண்டு திடுக்குற்றேன். "என்ன அரசி......!" என்று கேட்க நான் வாயெடுப்பதற்குள், "ஒன்று மில்லை" எனக் கூறிக்கொண்டே பரபரப்பாகத் தன் சேலை முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

(தொடரும்.)

# பண்டித—வி. இராமசாமி பிரிவு

சென்ற 4-12-42-ந் தேதி காலை நமது தோழர் வி. இராமசாமி நாயுடு சிறிதும் எதிர் பாராத நிலையில் காலமானார் என்ற செய்தி நம் செவிக்கு எட்டியதும் நாம் திடுக்கிட்டுப் போனோம். அன்று ஸ்ரீ இராமசாமி கோயமுத்தூர் டவுனிலுள்ள தம் இல்லத்தில் சிற்றுண்டி யருந்திக் கொண்டிருக்கையில் திடீரென மயங்கி விழுந்து விட்டாராம். உடனே அவ்வூர் பிரபல டாக்ட ரொருவரை வரவழைத்துப் பார்க்க, அவர் பரிசோதனை செய்து, இரத்தக் கொதிப்பும், பக்ஷவாதமும் ஏககாலத்தில் ஏற்பட்டதால் உயிர் போய் விட்டது எனக் கூறிய பிறகு தான், அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி அனைவருக்குந் தெரிந்தது.

பண்டித—வி. இராமசாமி ஒரு சிறந்த தமிழறிஞர்; பத்திரிகாசிரியர். கம்மவார் நாயுடு குல திலகரான அவர் தாய் மொழி தெலுங்கா யிருந்தும் தமிழ் மொழியில் பெரும் பற்றுகொண்டு அதில் புலமை பெற வேண்டி மதுரை தமிழ்ச் சங்கக் கல்லூரியில் சேர்ந்து பண்டித பரீக்ஷைக்குப் படித்தார். ஈரோடு 'குடியரசு' வாரப் பத்திரிகையில் சிலகாலம் உதவி யாசிரியர் வேலை பார்த்தார். அதன்பின், பழனி உயர்தரப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்தார். பிறகு நமது 'ஆனந்தபோதினி' மாதப் பத்திரிகைக்கு ஆசிரியராய் வந்தமர்ந்தார். நம் காரியாலயத்தில் பின்னர் 1932-ல் தொடங்கப் பட்ட "பிரசண்ட விகட"னையும் தாமே பொறுப்பு ஏற்று நடத்திவந்தார். சுமார் 12-வருஷ காலம் அவர் நமது பத்திரிகாலயத்தில் சேவை செய்து வந் திருக்கிறார். 1937-ல் தான் அவர் நம் காரியாலயத்தை விட்டு நீங்கி 'பீபிள்ஸ் பார்ட்டி' பத்திரிகை யொன்றில் தொடர்பு வைத்துக் கொண்டு சட்டசபை தேர்தலில் அக் கட்சி சார்பில் சென்னை நகரத் தொகுதி யொன்றில் அபேட்சகராக நின்றார். கடைசியாக, வைர வியாபாரி ஸ்ரீ கோபால சாமி நாயுடு நடத்தி வந்த 'விநோதன்' 'விநோதனி' என்ற பத்திரிகைகளை விலைக்கு வாங்கித் தம் சொந்தப் பொறுப்பில் நடத்தி வரலானார்.

தோழர் இராமசாமி சிறந்த சமூக சீர்திருத்தவாதி. நமது தமிழ்ச் சமுதாயத்தில் சாதி சமய பேதமின்றிச் சமத்துவத்தைக் காண விழைந்தவர். தோழர் இராமசாமியின் குண நலத்துக் கேற்பவே மனைவியும் வாய்த்ததுதான் விசேஷமானது. ஸ்ரீமதி. ரங்கநாயகி யம்மையார் நற்குண நற்செயல்களுக்கே உறைவிடமானவர். பொறுமைக்குப் பூஷணம். சாந்தத்தின் சொரூபம். நல்ல தமிழ்ப் புலமை வாய்ந்தவர். சென்னை யூனிவர்ஸிடி வித்வான் பரீக்ஷையில் தேறியவர். 'வித்யோதயா மகளிர் கல்லூரி'யில் சில வாண்டுகள் தமிழாசிரியையாய் இருந்தவர். இப்போது 'விநோதனி' பத்திரிகை ஆசிரியையா யிருந்து வருகிறார். கணவரது பிரிவினால் வாடி வருந்திவரும் அவ்வம்மையாருக்கும், அவரது ஆறு வயது குமாரனுக்கும், மற்றும் மைத்துனர் ஸ்ரீ. வேணுகோபால்சாமி நாயுடு முதலிய உறவினர், நண்பர்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்து, இறைவன் அவர்களனைவர்க்கும் மன ஆறுதலை யளிக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதல்லது நாம் வேறென்ன செய்ய முடியும்?

# குமரி நாடு

(டி. எம். அப்பாவு.)

நேற்று வரை முடி மன்னர்களாய் இருந்தவர்களிற் பலர் இன்று சாதாரண மனிதர்களாகி விட்டனர். உலகிலேயே சீருஞ் சிறப்பும் பெற்றிருந்த நாடுகளிற் பல இன்று மாற்றரசனுக்கு அடிமையாகி விட்டன. வானோக்கி வளர்ந்திருந்த கட்டிடங்களிற் பல இன்று தரை மட்ட மாக்கப்பட்டு விட்டன. இதுதான் சரித்திரம் கூறும் உண்மை. மாறுதல் உலகின் இயற்கை.

உலக சரித்திரங் கூறும் மாற்றங்களிலே அரசியல் மாற்றங்களும், வாழ்க்கை மாற்றங்களும் மட்டும் அடங்கினவன்று. உலகின் நில அமைப்பும் காலத்திற்குக் காலம் மாறுபடு மென்பது ஆராய்ச்சியிற்கண்ட தெளிவு. இப்போது உலகிலேயே தனக்கு நிகரில்லை என நிற்கும் இமயமலை ஒரு காலை கடலின் கீழ் அமிழ்ந்திருந்தது. இப்போது கடற் போர்களுக்கு இடமாக இலங்கும் மத்திய தரைக்கடல் ஒரு காலை நாற்புறத்தும் நிலத்தாற் சூழப்பட்ட ஏரியாக இருந்தது.

இப்போது நம் தமிழ் நாடு இந்தியா என்ற ஓர் நாட்டுடன் இணைக்கப் பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். ஆயினும் வடவரின் மொழி, கலை, நாகரீகம் முதலியன நம்முடையவற்றுடன் மாறுபட் டிருப்பதுடன் தமிழ்நாடு தனி நாடாகவே எண்ணப்பட்டு வருகிறது. இதற்குக் காரண மென்ன?

பல்லாயிர மாண்டுகளுக்கு முன்பு நம் தமிழ் நாடு ஆசியாக் கண்டத்துடன் தொடர்பற்ற ஓர் தனி நாடாக இருந்ததென்பதை யறிய நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் உண்மை இதுதான். மேனாட் டறிஞரின் ஆராய்ச்சி முடிவுகளும் பழந்தமிழ் நூல்களும் இதற்குச் சான்றாக உள்ளன.

பல்லாயிர மாண்டுகளுக்கு முன்பு, இப்போது இந்து திரைச் கடல் அலை கொழிக்கு மிடத்திலே ஓர் பெரும் நிலப் பரப்பு விளங்கி யிருந்தது. அது ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையில் தொடங்கி தற்காலத் தமிழகம், ஜாவா, போர்னியோ முதலிய கிழக் கிந்தியத் தீவுகள் ஆகியவற்றை தன்னுள்ளடக்கியதாய் ஆஸ்ட்ரேலியா வரையிலும் வியாபித்திருந்தது. மேனாட் டறிஞர் ஒருவர் கூறுவதைக் கவனியுங்கள். "முதலாம் காலக் கூறின் கடைப் பகுதியிலே ஓர் பெரிய நிலப்பரப்பு கிழக் காப்பிரிக்காவி லிருந்து தென் சீனா வரையில் நீண்டிருந்தது." (H. F. Blanford.)

இப் பெரிய நிலப் பகுதியின் அமைப்பை சில நூலார் படம் வரைந்து காட்டுகின்றனர். இப் பெரிய நிலப் பகுதிக்கு அவர்கள் இட்ட பெயர் 'லெமூரியா' என்பது. நம் தமிழ் மூதாதையர் இக் நிலப் பகுதியினை அறிந்திருந்தனர். 'குமரிக் கண்டமென்று அவர்கள் வழங்கினர். குமரிக் கண்டத்தின் வட எல்லை விந்தியமலை. இக்காலை வட இந்தியா என்று வழங்கப் படும் நிலப் பகுதி அக்காலை கடலின் கீழ் இருந்தது.

இப்பெரிய நிலப்பரப்பானது சில காலத்திற்குப் பின் ஓர் பெருங்கடற் பெருக்கினால் துண்டாடப்பட்டது. இதுவரை இம் மாதிரி கடற் பெருக்குகள் ஒன்பது ஏற்பட்டன என்று ஆராய்ச்சியாளர் குறிக்கின்றனர். குமரிக் கண்டத்தை யழித்த கடற்பெருக்கு கி. மு. 9564-இல் உண்டாயிற்றென்று ஸ்காட் எலியட் (Scott Elliot) என்னும் ஆராய்ச்சியாளர் குறிக்கிறார். இக் கடற் பெருக்கினால் ஆப்பிரிக்கா, ஆஸ்ட்ரேலியா, சீனா, பர்மா முதலியன தனித்துப் போயின. எஞ்சியது இப்போதுள்ள தமிழகமும், இலங்கை, ஜாவா, போர்னியோ முதலிய தீவுகளும் அடங்கிய ஓர் பெருந்தீவே.

இப்பெரிய தீவிற்கு 'குமரி நாடெ'ன்றும் பெயர்; 'குமரித் தீவு' என்றும் கூறுவர். இத் தீவில் நாவல் மரங்கள் மிகுதியாக வளர்ந்திருந்தமையால் 'நாவலந்தீவு' என்றும் வழங்கினர். இத் தீவைப் பற்றி ஐரோப்பிய அறிஞர்கள் கூறுவதால் மட்டும் நாம் தெரிந்து கொள்ளவில்லை. பழைய தமிழ் நூல்களில் பலவிடத்தும் இப் பெயர் காணப்படுகின்றது. இங்குப் பல புலவரும் புரவலரும் வாழ்ந்துள்ள செய்தி நமக்குக் கிடைக்கின்றது. கீழ் நாடுகளைப் பற்றிய விவரங்களை ஆராய்ந்து வந்த ஆல்பிரட் ரஸல் வாலஸ் (Alfred Russel Wallace) என்பார் கீழ்க்கண்டவாறு குறிக்கின்றார்: "மூன்றாம் காலக் கூறின் பெரும் பகுதியில் தென்னிந்தியாவும் இலங்கையும் அடங்கிய நிலப் பகுதி வடக்கே கடலை எல்லையாகப் பெற்றிருந்தது." இக் குமரி நாட்டைக் கடல் கொண்ட போதுதான் உயரிய தமிழ் நூல்களிருந்த எண்ணரிய புத்தக சாலைகள் அழிந்து போயின. அந்தோ! கடலரசே! எம் மினிய தமிழ் மீது உனக்கேன் இத்தனைக் கோபம்?

குமரி நாட்டிற்குக் குமரி யாறும் பஃறுளி (பல+துளி) யாறும் முக்கிய நதிகள். இப்போதுள்ள கன்னியாகுமரி முனைக்கும் இலங்கைத் தீவுக்கும் இடையிலுள்ள கடற் பகுதிதான் அக்காலை குமரிப் போருக விளங்கியிருக்கும். குமரி யாற்றை யடுத்து 'குமரிக்கோடு' என்ற ஓர் மலை இருந்தது. அதனைப் பிற் காலத்தார் 'மகேந்திரம்' என்று அழைத்தனர். பஃறுளியாறு நாட்டின் தெற்புறத்தில் இருந்தது.

இவ்விரண்டு நதிகளுக்கும் இடையே இருந்த நிலப்பரப்பு சுமார் எழுநூறு காவதம். (காவதம் எண்ணாயிர முழங்கொண்ட தூரம். இவ்வளவு விஸ்தீரண முள்ள இந் நாடு எழு உட் பகுப்புக்கொண்ட எழு பெரும் பகுதியாகப் பிரிக்கப்பட் டிருந்தது.

அருங்கதை சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார் அந் நாடுகளின் பெயர்களைக் குறித்திருக்கிறார். "எழ் தெங்க நாடு, எழ் மதுரை நாடு எழ் முன்பாலை நாடு, எழ் பின்பாலை நாடு, எழ்குன்ற நாடு, எழ் குணகரை நாடு, எழ் குறும்பனை நாடு" என்பன, அவை

குமரி நாட்டில் வழங்கிய மொழி தமிழ். ஆரியம் முதலிய மொழிகள் தோன்றுதற்கு முன்னமேயே தமிழ் வழங்கி வந்த தென்பதற்குச் சான்றுகள் பல உள. "பாலிமொழியும் கீர்வாணமும்...தோன்றுதற்கு முன்னமேயே......பாராச புரிந்த பைந்தமிழ்த்தேவி" என்கிறார் ஓர் புலவர். பஃறுளியாற்றிற்கும் குமரி யாற்றிற்கும் இடையே யிருந்த பெருவளநாட்டின் அரசனாகிய தனியூர்ச் சேர்ந்தன் பாடியதாகக் கொள்ளப்படும் "செங்கோன் தரைச் செலவு" என்னும் நூலின் செய்யுட்கள் பல கிடைத்திருக்கின்றன. இறையனார் அகப்பொருளுரை, அடியார்க்கு நல்லாருரையாய இவற்றில் இந்நூலின் செய்யுட்கள் காணப்படுகின்றன. இங்குக் கூறிய காரணங்களினாலே குமரி நாட்டில் வழங்கிய மொழி தமிழ் என்பது வெள்ளிடைமலை.



குமரி நாட்டில் தமிழ்மொழியில் தேர்ந்த புலவர்கள் பலர் இருந்துள்ளனர். அவர்களிற் சிலரின் பெயர் இப்போது கிடைக்கின்றது. பெருவள நாட்டின் அரசனாகிய தனியூர்ச் சேர்ந்தன் பாடிய 'செங்கோன் தரைச் செலவு' என்னும் நூலில் எழ் தெங்கநாட்டு முத்தூரகத்தியன், பேராற்று நெடுந்துறையன் முதலிய பல பெயர்கள் காணப்படுகின்றன.

மேற் கூறிய 'செங்கோன் தரைச் செலவு' என்னும் நூல் சில காலத்திற்கு முன் அச்சேறியது. இஃது முதலூழியில் தலைச் சங்கத்தார் காலத்தில் எழுதப்பட்டதாகத் தோற்றுகின்றது. இந்நூலை பஃறுளி யாற்றிற்கும் குமரியாற்றிற்கும் இடையேயுள்ள பெருவள நாட்டின் அரசனை முதலூழித் தனியூர்ச் சேர்ந்தன் பாடினதாகக் கூறுவாருமுளர்.

குமரி நாட்டைக் கடல்கொள்ளப் படுமுன் பாடப்பட்ட ஓர் தமிழ்ச் செய்யுள் புறநானூற்றில் காணப்படுகின்றது. அப் பாட்டையும் அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையையும் கவனியுங்கள்.

'எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோ
நன்னீர்ப் பஃறுளி மணலினு பலவே.' (புறம் 9.)

(இதன்பொருள்) எம்முடைய வேந்தனாகிய குடுமி வாழ்வானாக! தம்முடைய சிவந்த நீர்மையையுடைய போக்கற்ற பசிய பொன்னை கூத்தற்கு வழங்கிய முந்நீர் கடற்றெய்வத்திற் கடுத்த விழாவினையுடைய நெடியோனுளதாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளியாற்றின் மணலினும் பல காலம். (நச்சினார்க்கினியர்.)

குமரியாற்றிற்குத் தெற்கே பனைநாடு முதலிய நாடுகளும் மணிமலை குமரிக்கோடு முதலிய மலைகளும் முத்தூர் கபாடபுரம் முதலிய ஊர்களும் பஃறுளியாறு குமரியாறு முதலிய நதிகளும் இருந்ததென வேற்றோர் தமிழ்நூல் கூறும்.

தொல்காப்பிய நூலும் குமரிநாடு அழியா முன்னரே ஆக்கப்பெற்றதென அறிஞர் கூறுவர். இஃது உண்மையாயின் அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்துத் தந்தா ரென்பதே அடிபட்டுப் போகும். ஏனெனின் அக்காலை வட இந்திய நிலப்பகுதி நீரின் கீழ் இருந்தமையான் ஆரியர் மத்திய ஆசியாவிலேயே இருந்தனர். அக்காலை அவர்களுடைய வேதங்கள் கூட ஆக்கப் பெறவில்லை. இப்போது தொல்காப்பியப் பழமையை நோக்குவோம்.

பனம்பாரனார் தொல்காப்பியத்திற்கு பாயிரம் உரைப்பான் தொடங்கற்கண்,

'வட வேங்கடம் தென்குமரி-யாயிடை
தமிழ்கூறு நல்லுலகத்து.' என்றார்.

அதாவது 'வடக்கே திருவேங்கட மலையும் தெற்கே குமரியாறும் எல்லையாக உடைய தமிழ்கூறும் நல்லுலகம்' என்றவாறு. இப்பொருள் படவே இளம்பூரணர் 'குமரியாறு கெடுவதற்கு முன்னையது' என உரையெழுதிப் போந்தார். இன்னும் அந்நூலின் நடையை நோக்குவார்க்கு அதன் தொன்மை விளங்கும்.

தமிழ் தழைத்தோங்கிய குமரிநாட்டைக் கடல் சிதைவு படுத்தியது. குமரிநாட்டைக் கடல் கொண்டமையைக் கூறப்புகுந்த இளங்கோவடிகள் 'பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடுங் கொள்ள' என்று கூறுவதோடமையாது, 'வடிவேலெறிந்த வான்பகை' என்றும் அதற்குக் காரணம் கூறிப் போந்தனர்.

இப்போது குமரிநாடு இல்லை. அதன் பெயரும் வெகு சிலராலேயே நினைக்கப்படுகின்றது. மற்றையோர் அதனை அறியாராய் உள்ளனர். தமிழை வளர்த்த அதன் பெருமையினையும் சிறந்து விளங்கிய அதன் உயர்வினையும் எண்ணிப் பார்த்தல் நம் கடமை யன்றோ! குமரியழிவினால் தமிழுக்கேற்ற நன்மை தீமையினை நோக்குவோம்.

மிக அகண்ட பரப்பிற் பேசப்பட்டு வந்த தமிழ்மொழி இப்போது குறுகிய இடத்து உறைவதாகி, பல்மொழிகளாப் பிரிந்து போனதுடன் அன்னிய மொழிகளாலும் இடர்ப்படுகின்றது. ஆகையினால் தமிழ்மொழி தாழ்ந்த நிலையடைந்து அருகிக்கொண்டு வருகின்றது. ஆரியம் முதலிய இறந்து பட்ட மொழிகளுள் ஒன்றாய் தமிழ் எண்ணப்படும் நிலைக்கு வருதலை நீக்க முயற்சிப்பது தமிழராகிய நம் கடமையன்றோ?

'அலைகடல் வரைப்பிற் பாடை யனைத்து(ம்) வென்று
உழல்தரு தமிழ்த் தெய்வத்தை உள்ளினைத்தேத்துவோம்.'

என்று மிரண்டடிகளும் உங்களுக்கு என்றும் நினைவிருக்கட்டும்.

தமிழைப் புறத்தே தள்ளி வேற்றுப்பாடையை விரும்பும் மக்களைக் கேளுங்கள்,

"தொண்டர்நாதனை தூதிடை விடுத்ததும்—முதலை
யுண்ட பாலகனை யழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்!"

# மறைந்த வெண்ணிலா

(டி. பி. சத்தியகீர்த்தி மோஹன தாஸ்)

"தேவகி! அந்த நீல விசும்பினிடை ஏன் அவ்வளவு லயித்து விட்டாய்? இயற்கையின் மனோஹரத்தில் உன் மனோரதத்தைச் செலுத்துவதில் உனக்கு இவ்வளவு பிரேமையா?"

"ஆம். அதோ பார்! இயற்கையின் ஓவியம் வானத் துகிலில் வரைந்துள்ள நேர்த்தியினை! அந்த மோனத்தைத் தான் மனம் முந்த விட்டு மகிழ்கின்றது."

"எனக்கு அது அவ்வளவு மோகனமாகப் படவில்லையே, தேவகி!"

"ஏன் முரளீ! இந்தக் கோலாகலம் உன் மனத்திற்குப் பிடிக்கவில்லை?"

"ஆம்! தேவா, நீ கூறுகின்றவைகளையும் கூறாத பல காட்சிகளையும் நான் உன்னிலேயே காண்கின்றேனே. அதற்கு மூலமாக ஒளிரும் உன் 'கண்களில்' தான் என்ன தேஜோமயம்! அந்தக் கருவண்டுகள் உன் கண்ணாடி வதனத்தில் நீந்தும் இந்தக் காட்சியை விடப் பேரானந்தம் அளிக்க வல்லது யாது உளது?"

"போ. முரளி, இந்த விளையாட்டுக்கு என்றுதான் முடிவோ பார்க்கிறேன்."

"இந்த அன்பில் மலர்ந்த இன்பக் கேளிக்கை உனக்கு வெறுப்பா யிருந்தால் நானே நிறுத்திக் கொள்கிறேன், தேவகி," என உருக்கமாகப் பதிலளித்தேன்.

திடுக்கெனத் திகைத்து விட்டாள். மறுகணம் என்னைக் கொஞ்சலும் கெஞ்சலுமாய் நோக்கி, "முரளீ! பார்த்தாயா இதற்குள்ளாகவா என்மீது கோபம், இதோ என்னைப் பார்" என்று கரங்களை வாத்ஸல்யம்? ததும்பப் பற்றினாள்.

என் இருதயம் பூரித்தது. கருமேகக் கூட்டத்தினை நோக்கி மகிழ் நடனம் புரியும் மயிலைப் போன்று என்னையே பார்த்தாள். அந்த ஆசை விழிகளில் அன்பின் சுடர் நர்த்தன மாடியது.

"அது சரி தேவகி! பிரயாணத்திற்கு எல்லாம் சித்தமாகி விட்டதா?"

"எல்லாம் நடந்து கொண்டுதா னிருக்கின்றது. சென்னைக்குக் கப்பல் எத்தனை மணிக்குப் புறப்படுகிறது?"

"நாளை மாலை தான். நேரம் தெரியவில்லை. நமது இரு குடும்பங்களும் நாளை இந்த நேரத்துக்குள் நடுக் கடலில் நீந்தும் கப்பலில் உன் இருப்போம். எனக்கும் சென்னை வரை நல்ல துணையாக நீயும் வருவாய்"

"ஆமாம் முரளீ, சென்னைவரையில் தான் நான் உன் துணைவியோ?"

"இல்லை தேவகி, அதன் பின்னும் நான் செல்ல விருக்கும் என் வாழ்க்கைப் பி[illegible]ணத்தில் நீதான் என் உற்ற துணைவி. என் இதய அரங்கத்தில் சதா நாட[illegible]யம் புரியும் உன் பேரெழிலுருவுக்கு என்னால் கொடுக்கக்கூடிய பரிசு அதுதான் கண்ணே."

"முரளீ! என் விழியின் மணியே, உன் களங்கமில்லா அன்பு என் கலங்கிய உள்ளத்தில் அமுதமாகப் பரிமளித்து விட்டது. அதோ பார்! வானக் கொடியில் மிளிரும் தூய மலர்களை. அதன் துல்லிய பரிசுத்த தன்மையதே உன் இருதயமும்........." என்று இன்னும் என்னென்னமோ சொன்னான்.

அவளது கண்கள் சந்திரன் உமிழும் பால் நிற ஒளியில் தாரகைகளைப் போல் மின்னின. மோகனம் மல்கிய அவள் வதனத்தை ஒரு குறு நகை தழுவிச் சென்றது.

"தேவகி!"

"முரளீ" என்றாள்.

ஒரே மௌனம். மனோரஞ்சித மலரில் தலை வைத் துறங்கும் நாகம் போன்று என் மார்பில் சாய்ந்தாள். அவளது சுருண்ட கூந்தல் என் முகத்தில் துள்ளி விளையாடியது. விம்மிய அவளது தேகம் என் அணைப்பில் லயமாடியது. அந்த மௌன உலகத்தைக் கலைக்க எங்கள் இரு ஜோடி உதடுகளிலிருந்தும் "இச்" சென்ற சப்தம் பிறந்தது.

## 2

நான் இந்த அழகிய ரங்கூன் நகருக்கு வந்து 8-வருடங்களாகின்றன! இந்த ரம்மியமான காலத்தில் தான் "தேவகி" என்னும் இன்பப் பொக்கிஷம் எனக்குக் கிடைத்தது. அவள் சற்றுதூர உறவினளும் கூட. வாழ்க்கையின் இனிய மதுரத்தை தேவகியுடன் சேர்ந்து அருந்தினேன். அந்த சாந்தியின் குளத்தில் விதி ஒரு கல்லைப் போட்டுவிட்டது. ஆகவே ஒரே குழப்பம். இரைச்சல். விச்ராந்தியின் கலக்கம்—ரங்கூன் நகர் தாக்கப்பட்டது. ஒரே கெடுபிடி. உயிருக்கும் பொருளுக்கும் உலைவைக்கும் ஜப்பானிய விமானங்களின் 'விர்......' சப்தம் ஒரு நாளைக்குப் பல தடவைகள் கேட்கும் அவை மறைந்தவுடன் எங்கும் துக்கக் குமுறல் அழுகைக் கூக்குரல். சோகத்தின் கொக்கரிப்பு. அங்க மிழந்து வாடும் மக்களும், தாயிழந்து தவிக்கும் சேய்களும்......அப்பப்பா-கொடுமை......கொடுமை-!

இவ்வளவிலும் க்ஷேமமாய் இருந்த பலரில் நாங்களும் சிலர். எத்தனை நாள் இப்படி இருக்க முடியும்? ஆகவே, நாளை மாலை கப்பலில் சென்னைக்குச் செல்ல நாங்கள் இரு வீட்டாரும் முடிவு செய்து விட்டோம். அந்த பயங்கரமான காலங்களிலும் என்னில் நளினமான ஒரு சக்தியை தேவகி பிரகாசிக்கச் செய்துகொண் டிருந்தாள். என் அந்தராத்மாவையே தன் சுந்தர வனமாக்கி அதில் பிரேமையின் மலர்களைக் கொய்து என் மானசீக பிம்பத்திற்கு அனுதினமும் சூட்டினாள். சுருங்கக் கூறின் அவள் ஒரு மலர்; நான் அதன் கந்தம். அவள் உடல்; நான் உயிர்.

## 3

அடுத்த நாள் காலை மணி 8-இருக்கலாம். நிஷ்களங்கமான வானத்தில் இரு மேகக் கூட்டங்கள் ஒன்றை ஒன்று துரத்தி நீந்தும் காட்சியொன்றை ரஸித்த வண்ண மிருந்தேன்.

அச்சமயம் "முரளீ!" என்று மாடியின் கீழிருந்து ஓர் சப்தம் பிறந்தது.



அதன் பின்னாலேயே "வாம்மா வா, அவன் மாடியிலே இருக்கான், போ" என்று என் தகப்பனாரின் குரல் கேட்டது.

ஆம்! அவள் தேவகிதான்.

மறுகணம் மாடி வாசலில் ஒரு தந்தப் பதுமை வந்து நின்றது. இரு புறமும் இரு ஜடைகள் பின்னிவிட்டு மஞ்சள் கரையுடன் கூடிய வெண் பட்டு உடுத்தி நெற்றியில் சிவப்புக் குங்கும மிட்டு தேவகி தேவதையைப் போல் நின்றாள்.

"முரளீ!"

"என்ன தேவகி! அதிகாலையில் எங்கோ புறப்பட்டு விட்டாய்போலிருக்கின்றதே?"

"இல்லை முரளீ! உங்கள் வீட்டு சாமான்களுடன் எங்களுடையதையும் போட்டு முன்னாடியே அனுப்பி விட்டார்கள். வீடு வெறிச்சின்னு இருக்கு. தவிர, அம்மா ஏதோ அந்த கடற்கரை புத்தர் கோவில்லே நேர்ந்துகொண் டிருக்காளாம். ஆக, இப்போ அங்கே போய் தரிசிச்சிட்டு மத்தியானம் ஒரு மணிகெல்லாம் திரும்பி விடுவோம். வந்தவுடன் சென்னை செல்ல வேண்டிய ஏற்பாடுகளில் ஈடுபட வேண்டியதுதான்."

"புத்த பகவான் சந்நிதியில் எனக்காக என்னவென்று வேண்டிக் கொள்வாய், தேவகி?"

"நம் இரண்டு பேரையும் க்ஷேமமாய் சென்னை சேர்த்துப் பின் நம்மில் தாம்பத்திய வாழ்வு பரிமளிக்கச் செய்யுமாறு அந்த சாந்திக் குன்றை வேண்டுவேன். சரி, நான் போய் வரட்டுமா?"

"ஆகட்டும் தேவா! ஜாக்கிரதையாகப் போய் வரவேண்டும், தெரியுமா?"

"உத்தரவு மஹராஜ்!" என்று 'களுக்' கென நகைத்துவிட்டு மின்னல் போல் ஓடி மறைந்து விட்டாள்.

## 4

மாலை செல்ல விருக்கும் பிரயாணத்தை நினைத்து ஆனந்தமும், அழகிய ரங்கூனை விட்டுப் பிரிய வேண்டுமே என்ற துக்கமும் என் மனதை ஆரோகணித்து நின்றன. வெறும் சுவற்றை, ரவி வர்மன் சித்திரத்தைப் பார்ப்பது போல் ஊன்றிப் பார்த்துக்கொண் டிருந்தேன்.

மணி 10-அடித்து சற்றுநேரம் கழிந்தது. நிசப்தம் நிலவிய தெருவில் திடீரென இரைச்சல் கேட்டது. திடுக்கிட்டவனாய் வெளியே சென்றேன். பெரிய பெரிய மோட்டார் லாரிகள் வெள்ளை வீரரைத் தாங்கி வேகமுடன் சென்றுகொண் டிருந்தன. பீரங்கி வண்டிகளைக் காளை மாடுகள் திடுதிடுவென இழுத்துச் சென்றன. மறுகணம் அபாய அறிவிப்பு சங்கு "ஓ" வென விட்டுவிட்டு அலறியது......'ஆ' 'ஓ' என்ற சப்தங்கள் வானைப் பிளந்தன. எல்லோரும் ஓடி ஒளிந்தது போல் யானும் ஒரு பாதுகாப்புக் குழியில் சென்று நின்றுகொண்டேன். கீழக் கோடி வானத்தில் கணக்கற்ற ஜப்பானிய விமானங்கள் முகிலினை முத்தமிட்ட வண்ணம் வானமண்டலத்தில் பெருமிதமாக வந்துகொண் டிருந்தன. இடி முழக்கமென சப்தமிட்டு

வந்த விமானங்களி லிருந்து 'பள பள' வென குண்டுகள் பொழியப்பட்டன. பீரங்கிகள் முழங்கின. குண்டுகள் வெடித்தன. ஓர் சில விமானங்கள் தரையை நோக்கி அடியுண்டு சிதைந்து வீழ்ந்தன. வீட்டின் கூரைகள் பறந்தன. சிவப்பு சுவாலை இல்லங்களின் தலைகளில் நர்த்தன மாடின. எங்கு நோக்கினும் பூசல்—குழப்பம்—நிம்மதியின்மை. 20-நிமிடங்கள் குண்டு மழை பொழியப்பட்டது. திடீரென எப்படி விமானங்கள் வந்ததோ அதே போல் மறையலாயின.

குழியினின்றும் சேதமின்றி வெளியே வந்தேன். பயங்கரமாக குண்டு வீசியது இதுவே முதல் தடவை. தீ யணைப்பவர்களும், உதவி செய்பவர்களும் அங்கு மிங்கும் ஓடினர். என் மனம் நிலையின்றித் தவித்தது. திடீரென என் இதயவானில் மின்னல் போல் தேவகியைப் பற்றிய எண்ணம் மின்னி மறைந்தது. உடல் து ணுக்கென்றது. எல்லாம் சூன்யமா யிருந்தது. என் விம்மிய மனம் அவளைக் காணத் துடியாகத் துடித்தது.

"தேவகீ ! தேவகீ !!" என்று அரற்றிய வண்ணம் இடிந்த இல்லங்களையும், மடிந்த பிணங்களையும் தாண்டி பித்தனைப் போல் புத்தன் கோவிலுக்கு ஓடினேன்.

## 5

3-மைல்கள் ஓடோடியும் வந்துவிட்டேன். தூரத்தே புத்தமகான் பள்ளி கொண்டுள்ள கோவிலின் கோபுரம் விண்ணை மருவி நின்றது. அருகே எல்லையற்ற கடல் குமுறிக் கொண்டிருந்தது. என் கரங்கள் ஆலயத்தை நோக்கிக் குவிந்தன. "என் தஞ்சமே, புத்ததேவா! என் தேவகியைக் காப்பாற்று" என்று அன்பொழுக விண்ணப்பித்தேன். கண்களில் கண்ணீர் தாரை தாரையாக ஓடியது. ஆலயப் படிகளில் காலை வைக்கும் போது என் உடல் நடுங்கியது. "தேவகீ தேவகீ" என்று அரற்றிக் கொண்டு உள்ளே ஓடினேன். என் நிலையிழந்து தவிக்கலானேன்.

உள்ளே வேதனையின் முனகல் சப்தம் ஈனஸ்வரத்தில் பல பாகங்களிலு மிருந்து வந்துகொண் டிருந்தது. ஆங்காங்கே சிறிய சிறிய கூட்டங்கள் அவஸ்தைப்படும் ஜீவன்களைச் சுற்றி இருந்தன. ஆலயத்தின் நடுவே ஒரு பெரிய தூண் விழுந்திருந்தது. தவிர மேல் தளத்தி லிருந்து பெரும் கற்களும், விட்டங்களும் அருகே எங்கோ குண்டு விழுந்த அதிர்ச்சியால் கீழே விழுந்திருந்தன. அந்தக் கோடியில் அன்பின் தேஜசுடன் புன்னகை மலிந்திருக்கும் புத்த விக்ரகம் இருந்தது. புத்ததேவன் காலடியில் ஒரு சிறு கூட்டம் முணுமுணுத்துக் கொண்டிருக்க ஒரு பக்கத்தில் தேவகியின் தாயார் நின்று விசும்பிக் கொண்டிருந்தாள். விஷயம் புரிந்து விட்டது. விண் மீன்களுடன் தொட்டு விளையாடின நான் கட்டிய மானஸீக இன்பக் கோட்டை அப்போதே பொல பொலவென உதிர்ந்துவிட்டது. கூட்டத்தினருகே மகாவேகமுடன் சென்றேன். என் தொண்டை அடைத்து விட்டது. கண்கள் இருண்டன.

சாந்தி அரியணையில் உட்காரவைத்து பிரேமை மகுடத்தை என் சிரத்தில் சூட்டுவித்த என் கோமளம்—தங்கச்சிலை—தேவகி, ஆம்! அவள்தான்



கண்களை மூடிப் படுத்திருந்தாள். இடை இடையே தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தாள் அவள் தாயார். தேவகியின் தலையில் ஒரு பெரிய கட்டு கட்டி—அதன்மேல் ஒரு மெல்லிய துண்டு போடப்பட்டிருந்தது. மார்பின் இரு புறங்களிலும் இரு ஜடைகளும் பெருமிதமாகப் படுத்திருந்தன. அவள் திலகம் மின்னியது. பொங்கும் என் இதயத்தை அடக்கிக்கொண்டு அவளருகில் அமர்ந்து "தேவகீ !" என்று குழந்தைபோல் குழறினேன். என் கண்கள் கண்ணீரால் மறைக்கப்பட்டது.

சிப்பியினின்றும் கருமாணிக்க முத்து வெளிப்படல் போன்று மெல்ல கண்களைத் திறந்தாள். என்னைக் கண்டவுடன் அவள் கண்கள் வியப்பினால் விரிந்தன.

"முரளீ !" என்று உரிமையுடன் என் கரங்களைப்பற்றித் தன் மார்பில் வைத்துக் கொண்டாள். அவள் வதனம் குறுநகை பூத்தது. ஆனால் கண்கள் மட்டும் நீரைக் கக்கின.

"முரளீ ! என் அழுகிறாய். என் சிரத்தினின்றும் ஊற்றும் ரத்தத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்து விட்டாயா? எனக்கு உபத்திரவம் ஒன்றுமில்லை. என் தலையினை எங்கு வைத்திருக்கின்றேன் பார்த்தாயா? தஞ்சமடைந்தவரை அஞ்சேல் என அரவணைக்கும் என் அப்பன் புத்தன் "காலடிகள்" அது. இந்த பயங்கரமான உலகத்தைவிட்டு சோபனம் ததும்பும்—சாந்தி மிளிரும்—மேலகத்திற்குச் செல்லத்தான் என் நெஞ்சு வாஞ்சையுறுகின்றது. அதுதான் என் இதயத்திற்கு மிகவும் ரமிக்கின்றது. அழாதே முரளீ."

அதோ பார்! அங்கு ரத்தினக்கற்களின் அஸ்திவாரத்தில் எழும்பிய ஸ்வர்ண மண்டபத்தை. அங்குதான் நான் செல்லப் போகிறேன். நீயும் அங்கு வந்தவுடன் நாம் சல்லாபித்திருக்கலாம். உன் அரவணைப்பின் இன்பத்தில் நான் லயித்திருப்பேன். பரிசுத்த ப்ரேமை மாதாவின் மடியில் நானும் நீயும் நிம்மதியுடன் துயில் கொள்ளலாம். நான் உன்னிடம் சொல்ல விரும்பியது இவ்வளவுதான். என்னால் பேச முடியவில்லை. நீ மட்டும் அழாமலிரு, முரளீ."

நிமிடங்கள் வேகமாகக் கடந்தன. அழுகைக்குரலைப் பல இடங்களில் கேட்டேன்.

புத்ததேவன் காலடிகளைக் கெட்டியாகப் பிடித்து அணைத்துக் கண்ணீர் விட்டாள். பின் கரங்களைக் கூப்பி 'அவன்' அருள் முகம் நோக்கினாள். என் கரங்களும் தானாகவே கூப்பிக் கொண்டன. மந்தகாசம் தவழக் கடைசி முறையாக என்னைப் பார்த்து ஆனந்தமாக நகைத்தாள். அவள் கண்கள் கோடி சூரியனைப்போல் அண்டத்தையே உருட்டும் பாவனையில் சுழன்றன. கரங்கள் தளர்ந்தன. பெருமூச்சுவிட்டு கண்களை மூடினாள். மோகன ரோஜா உதிர்வதுபோல் சிரம் தொய்ந்து விட்டது. "கவீர்" என்ற அழுகைக்குரல் கோவிலை இடித்து விடுவதுபோல் கேட்டது. ஆம். உண்மையாகவே தேவகியின் வாழ்க்கை ஏடு மூடப் பட்டது. அவள் இறந்து விட்டாள். என் இருதயத் துகிலில் பிரேமையினை வரைந்த

# குற்றாலப் பவனி

(துறைவன்.)

ஆண்படைத்தவர் பார்த்து அனுபவிக்க வேண்டிய காட்சிகளில் அரசன் பவனி வரும் காட்சியும் ஒன்று. மேளதாளங்கள் என்ன, கொடிகள், குடைகள் என்ன! முகபடாம் தரித்த யானைகள் என்ன! கோலாகலமா யிருக்குமல்லவா? இப்பேர்ப்பட்ட காட்சிகளைக் காவியங்களில் கவிகள் காட்டும்பொழுது நமக்கு ஆனந்தம் பொங்குகிறது. ஊர்வலத்தைப் பார்க்க வரும் மக்களிடையே முக்கியமாகப் பெண்களிடையே தான் என்ன பரபரப்பு? தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொள்வதில் தான் எத்தனை உற்சாகம்!......இவற்றை யெல்லாம் நன்கு அனுபவித்த கவி திரிகூட ராசப்பர் தன் "குறவஞ்சி" நாடகத்திலே குற்றாலநாதன் பவனிவரும் கோலமார் காட்சியை நம் கண் முன்னால் காட்டுகிறார்.

நன்னகரின் ராஜவீதியிலே, திரிகூடாசல நாதன் பரிவாரங்கள் புடைசூழப் பவனி வருகிறான். இளங்காளை மேலேறி வரும் இறைவனது தோற்றத்திலே மக்கள் பரவசமாகிறார்கள். எல்லோருக்கும் முன்னால் கட்டியக்காரன் "நேர் கொண்ட புரிநூலும் நெடிய கைப்பிரம்புமாக "கட்டியங் கூறி வருகிறான். கம்பீரமாக மேற்கெழுந்த சந்திரனைச் சூடிக்கொண்டு கிழக்கெழுந்த சூரியனைப்போல வரும் குற்றாலநாதனை வாழ்த்துகிறான். பின்னாலே தேவரும் முனிவரும் வருகிறார்கள். பக்கத்திலே கணபதி ராயனும் "செவ்வேள் குறவனும்" வருகிறார்கள். யானைகளின் முதுகில் வைத்து அடிக்கிற முரசொலி காதைப் பிளக்கிறது. உடுக்கைகள் வேறு கொட்டுகிறார்கள். இச் சப்தத்தைச் சகிக்காமல் யானைகள் துதிக்கைகளால் தங்கள் படர்ந்த செவிகளைப் பொத்தப் பார்க்கின்றனவாம். அடியார்கள் திருப்பல்லாண்டும், தேவார திருவாசகங்களும் பாடுகிறார்கள். எல்லாமாய்ச் சேர்ந்து ஒரே ஆரவாரமா யிருக்கிறதாம்.

இடியின் முழக்கொடு படரு முகிலென
யானை மேற்கன பேரி முழக்கமுந்

---

என் தேவகி குறுநகை கொண்டு மஹாலக்ஷ்மியைப்போல் புத்தன் காலடியில் படுத்திருந்தாள்.

சடலம் சற்று நேரத்தில் எடுக்கப்பட்டது. பேடை இழந்த அன்றிலெனத் தவித்தேன். கோவிலின் வாசல் வரைக்கும் அந்தக் கூட்டத்துடன் சென்றேன். அதற்குமேல் ஒன்றும் செய்யத் தெரியாது நின்று விட்டேன். ஆனால், இரவின் இருளில் மேலே முல்லைச் சிரிப்புடன் மினுக்கும் தாரகைகளின் நடுவே பெருமிதமுடன் நடனமாடி வரும் வெண்ணிலா திடீரென மறைந் தொழிந்ததுபோல், என் காதல் வானில் ஜோதி வீசி ஜாலமாடிய 'தேவகி' என்னும் அந்த அன்பு நிலா திடீரென எங்கோ மறைந்து விட்டதை மட்டும் நன்கு உணர்ந்தேன்.



துடியின் முழக்கமும் பார்த்து திசைக்கரி
துதிக்கையாற் செவிபுதைக்கவே
அடியர் முழக்கிய திருப்பலாண்டிசை
யடைத்த செவிகளுந் திறக்கவே
வடிசெய் தமிழ்த்திரு முறைகளொரு புறம்
மறைக ளொருபுறம் முழங்கவே.

இவ்வாறு "சேனைப் பெருக்கமும் தானைப் பெருக்கமும்" பின்வரப் பவனி வருகிற ஈசனைக் காண்பதற்குப் பெண்கள் சமையற்கட்டை விட்டு ஓடோடியும் வருகிறார்கள் முன் வாசலுக்கு. கை வேலைகளை அப்படியப்படியே போட்டுவிட்டு வருகிறார்கள். ஓடி வரும்பொழுது கால்களிலுள்ள சிலம்புகள் அவர்கள் வருகையைத் தெரிவிக்கும் முரசைப்போல் ஒலிக்கின்றனவாம். மானினம்போல் மருண்டு வருகிறார்கள், கையிலே மானைப் பிடித்தவனாகிய ஈசனைப் பார்க்க என்று நயமொழுகக் கூறுகிறார் கவி.

"ஒருமானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்துவரும்
ஒருகோடி மான்கள்போல் வருகோடி மடவார்."

பிரம்மாண்டமான ஊர்வலத்தின் மத்தியில் ரிடப வாகனத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் ஈசனைக் கண்டு உள்ளத்தைத் திறை கொடுக்கிறார்கள். "மார்பில் பூணூல் அணிந்திருக்கிறானே, இவன் பிரமதேவன் தானோ?" என்று கேட்கிறாள் புத்தி மயங்கிய ஒருத்தி. மற்றொருத்தி நகைக்கிறாள், "அட, அசடே, பிரமன் என்றால், கையிலும் கழுத்திலும் பாம்பு சுற்றிக் கிடப்பானேன்" என்கிறாள். இன்னும் சில பெண்கள்,

"விரிகருணை மாலென்பார் மாலாகில் விழியின்மேல்
விழியுண்டோ முடியின்மேல் முடியுண்டோ வென்பார்."

[விழிமேல் விழி—நெற்றிக்கண். முடிமேன் முடி—சடாமகுடம்.]

பிறகு "நெற்றிக்கண்ணும் சடாமகுடமும் உடைய இவன், பிரமனும் பரந்தாமனும் சூழ வருதலால், திரிகூடாசல நாதனே" என்று தெளிந்துவிடுகிறார்களாம்.

பவனியைக் காணவரும் அவசரத்தில், பெண்கள் நிலைமறந்து போகிறார்கள். ஒரு கையில் வளையலைப் போட்டுக்கொண்டிருந்த பெண்ணொருத்தி இன்னொரு கையி லணிவதற்கு மறந்து ஓடி வருகிறாளாம். மற்றவர்கள் பார்த்து நகைக்கும் பொழுதுதான் அவளுக்கு தன் தவறு தெரிகிறது; வெட்கம் மேலிட்டுத் தலை கவிழ்கிறாள்.

"ஒரு கைவளை பூண்டபெண்கள் ஒரு கைவளை பூணமறந்
தோடுவார் நகைப்பவரை நாடுவார் கவிழ்வார்."

ஆடை, அலங்கோலமாக ஓடி வருகிறார்களாம் சில பெண்கள். இன்னுமொருத்தி ஒரு கண்ணுக்கு மை தீட்டிவிட்டு, இன்னொரு கண்ணுக்குத்

நீட்ட, விரல் நுனியில் மையை எடுக்கிறான். அதற்குள் பவனியின் பேரிகை முழக்கம் கேட்டு விடுகிறது. உடனே,

"கருதுமனம் புறம்போக வொரு கண்ணுக்கு மையெடுத்த
கையுமாய் (ஒ)ருகண் (இ)ட்டமையுமாய்."

வருகிறாளாம். எத்தகைய ஆச்சரியமான, மயிர் சிலிர்க்கும்படியான காட்சிகள்!

ஈசனது அழகைப் பருகும் பெண்கள் கண் கொட்டாமல் அப்படியே விழுங்கி விடுவதுபோல் பார்க்கிறார்கள். அவர்களைப்போல் ஊர்வலமும் நகராமல் நிற்கவா செய்யும்? "இந்தத் தெருவைவிட்டு இவ்வளவு சீக்கிரம் மறைந்துபோய் விட்டானே" என்று ஆற்றாமைப் படுகிறார்கள். "இன்னுங் கொஞ்சநேரம் நின்று, மன்மதனை வெல்லானோ" என்று ஏங்குகிறார்கள்.

"திருபனிவன் நன்னகரத் தெருவிலே நெடுநேரம்
நில்லானோ மதனை யின்னம் வெல்லானோ வென்பார்,"

இந்தச் சமயத்தில் தென்றல் வீசுகிறது. பெண்களது விரகத்தீ தென்றல் உதவியால் கொழுந்து விடுகிறதாம். "இந்தக் கொடுந் தென்றலை யடக்குவா ரில்லையா" என்று கேட்கும் பெண்களது கண்ணில் ஈசனது தோள்களை ஆர்வத்தோடு தழுவும் பாம்புகள் விழுந்து விடுகின்றன. "அந்தப் பாம்புகளுக்குத்தான் பசி யென்பது கிடையாதா? இந்தத் தென்றலைக் குடிப்பதற் கென்ன?" என்று கோபமாய்க் கேட்கிறார்கள். காற்று பாம்புக்கு உணவல்லவா?

"பைவளைத்துக் கிடக்குமிவன் மெய்வளையும் பாம்புகட்குப்
பசியாதோ தென்றலைத்தான் புசியாதோ." என்பார்.

விரக தாபத்தால் மெலிந்து விடுகிறார்கள் பெண்கள். கருமேகம் போன்ற கூந்தல் அவிழ்ந்து விடுகிறது. கையில் வளையல்கள் கழன்று விடுகின்றன. "இப்படிக் குழலையும் வளையையும் அபகரித்துக் கொண்டானே இவன்! சடாமகுடம் வேறு தரித்துக் கொண்டிருக்கிறான் இந்த லட்சணத்தில், என்ன அநியாயம்!" என்று ஏக்கத்தோடு கூடிய எக்களிப்பிலே மூக்கின்மேல் விரலை வைக்கிறார்களாம்.

இந்தக் காட்சிகளையும் வர்ணனைகளையும் படிக்கும்போது உள்ளங் கனிகிறதல்லவா? இந்த அழகான சம்பாஷணைகளிலேதான் எவ்வளவு நயம்! விஷயங்களெல்லாம் என்ன அற்புதமான எளிய தமிழிலே சித்திரிக்கப் படுகின்றன! பெண்கள் பேசும் பேச்சும் போராவமும் நிறைந்த இந்த அழகிய பவனிக்காட்சி நம் மனக்கண் முன் என்றும் நிற்கின்றன அல்லவா?

---

# அமித போகம் ★

(V. சங்கர ஐயர்) ★

அமிதபோகத்தால் ஆயுள், ஆரோக்கியம், புத்தி, தைரியம்; வீரியம் முதலிய புருஷ குணங்களை இழக்க நேரிடுகிறது. காம வெறி பிடித்த பல்லாயிரம் வாலிபர்கள் பற்பல பயங்கர வியாதிகளால் பீடிக்கப்பட்டு அகால மரணத்தை யடைகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் (அமிதமானால்) அமிருதமும் விஷமே யாகும். அதுபோலவே தான் குடியும். இவ்விரண்டும் மனிதனை தன்னறிவில்லாமல் காலக்கிரமத்தில் மிகக் கேவல ஸ்திதியில் கொண்டுவிட்டு விடும்.

ஒரு துளி இந்திரியத்தில் அடங்கி யிருக்கும் தத்துவத்தை அறிந்தவன் ஒருகாலும் அந்த ஜீவாதாரப் பொருளை வீணாக்கமாட்டான். இவ் விஷயத்தைக் குறித்து தற்கால வாலிபர்கள் நன்கு அறிந்து ஒழுங்கு மீறி நடக்காமல் இருக்க வேண்டுமென்ற அவாவாலேயே இந்த விஷயத்தைக் குறித்து இங்கு எழுதத் துணிந்தேன்.

பூதக்கண்ணாடி மூலம் பரிசோதித்தால் விந்துவில் எவ்வளவோ ஜீவப் பிராணிகளைக் காண முடியும். கெட்டியானதில் இவைகள் மிக அதிகம். இச் சிறிய அணுக்களே சந்தான விருத்திக்கு மூலாதாரம். குறைவும் குற்றமும் அற்ற புத்திசாலியான புத்திரோற்பத்திக்கு அதிகமான அணுக்களையுடைய இப்பொருளே அவசியமாகும். அமித போகத்தால் இந்திரிய ஸ்கலிதம் சீக்கிரமாகவும், தண்ணீராகவும், குறைந்த ஜீவ அணுக்களையுடையதாகவும் வருகிறது. ஆகையால் இவர்களின் குழந்தைகள் பலக் குறைவுள்ளவைகளாகவும், அங்க ஹீனமுடையவைகளாகவும், குறுகிய ஆயுளையுடையனவாகவும் இருக்கின்றனர். அமித போகஸ்தர்களின் குழந்தைகள் நே2யும் பாயுமாய் தேரைக்காலும் தேரைக்கையுமாய் சதை குன்றி, கரப்பான், சிரங்கு, வாய்ப்புண், குடல்நோய் முதலிய பல நோய் வாய்ப்பட்டு நரக வாழ்க்கையில் காலம் தள்ளுகின்றன. தத்துவ சாஸ்திரிகள் 60 துளி இரத்தத்திலிருந்து ஒரு துளி விந்து உண்டாகிறது எனப் பரீக்ஷை செய்து கண்டுபிடித் திருக்கிறார்கள். இதிலிருந்தே அமித போகிகள் எவ்வளவு இரத்தத்தை இழக்கிறார்கள் என்பதை கணக்கிட்டுக் கொள்ளலாம்.

விந்து அனாவசியமாகவும் அதிகமாகவும் செலவழிக்காம லிருந்தால் சரீரகாந்தி, தேஜஸ், சரீரபுஷ்டி, மனோதைரியம், சரீரபலம், புத்தி இவைகள் குறையாமல் விருத்தி யடைகின்றன. இரவு பகலின்றி காமவெறி பிடித்தவன் காந்தத்தைப்போல் இழுக்கும் வியாதிஸ்தர்களான வியபசாரிகளின் மோகவலையில் சிக்கிக்கொண்டு தன்னையும், தன் குடும்பத்தையும் தன் தனத்தையும் இழக்கின்றான். இது விஷயமாக கோவலன் முதலிய பல கதைகளிருக்கின்றன.

ஆகையால் வாலிபர்களே! இம்மாதிரி விஷயங்களில் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியமாகும். கடவுளுக்குப் பயந்தாவது ஒழுங்காக இருங்கள். அவருக்குத் தெரியாமல் ஒன்றுமே செய்ய முடியாது என்பதை உணரவும். அவர் தண்டனையும் ஒருவராலும் தடுக்க முடியாததேயாம். ஆகையால் கடவுள் அன்புக்குப் பாத்திரமாகும்படி பாடுபடுவீர்களாக!

# தலைவிதி

(க. சிதம்பரம் பிள்ளை.)

தலைவிதி என்பது தலையெழுத்து. அதாவது ஒவ்வொருவரும் அன்னையின் வயிற்றில் கருக் கொள்ளும் அக்காலத்திலேயே அதன் பிற்கால வாழ்வு இன்ன விதந்தான் இருக்க வேண்டும் என்பதை அதன் தலையில் சிருட்டி கருத்தாவினால் எழுதப்பட்டு விடுகிறதென்றும், சுடுகாட்டிற் கிடக்கும் தலை யோட்டைப் பார்த்தால் அதிற் சில வரைகள் காணப்படுகின்றனவே, அவை ஒவ்வொன்றும் அவ் வுடம்பு உயிருடன் இருக்கும் போது அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பப் பகுதிகளை குறித்து வைத்திருக்கும் குறிப்புகளாகும் என்றும் சொல்லப்படுகின்றன.

உலகத்திற் பார்க்கப் போனால் மனிதர் எல்லாம் ஒரேபடித்தாக இல்லை. வசதியற்ற சிறிய குடிசை ஒன்றில் வறுமைப் பிணியால் வாடி, ஒரு கவள அன்னத்துக்கும் வழி காணாமல், தானும் மனைவியும் பல குழந்தைகளுமாக தவியாய்த் தவிக்கிறான் ஒரு பரம ஏழை. உந்நதமாய் உயர்ந்த அழகிய மாளிகையில், அறுசுவை பதார்த்தங்களாலான உணவு வகைகளை உண்டு, பசி என்பதே இன்னதென்று தெரியாமல் ஏகபோகமாய் வாழ்கிறான் ஒரு தனவந்தன்.

என்னதான் தொழில் முயற்சிகளைச் செய்து பார்த்தாலும் ஒருவனிடத்துப் பணம் சேரவே மாட்டேனென்கிறது; அதைப்பற்றி இலட்சியமே செய்யாத ஒருவனிடத்து அது மேன்மேலும் வந்து குவிகிறது.

தந்தத்தால் செய்யப்பெற்ற சிவிகையின் மீது ஆனந்தமாக உட்கார்ந்துகொண்டு சவாரி போகிறான் ஒருவன். அவனைப் போன்ற மனிதர் பலர் அவனைச் சுமந்துகொண்டு போகிறார்கள். இப்படி இன்னும் அனேக அனேக வகையான வேறுபாடுகள் உலகத்தில் காணப்படுகின்றன. கடவுள் படைப்பில் உட்பட்ட மக்கள் பற்பல வகையில் உழலக் காரணமென்ன?

கடவுள் அருள் வடிவானவர், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிபவர், பாரபட்சமில்லாதவர். அத்தகைய கடவுள் மனிதனைப் படைத்தல் செய்தார் என்றால், ஒருவனை ஏழையாகவும் இன்னொருவனைப் பணக்காரனாகவுமா சிருஷ்டித் திருப்பார்? ஒருகாலுமில்லை.

பின் ஏன் உலகத்தில் மக்கள் பலதரப்பட்ட நிலைகளில் இருக்கிறார்கள்? எத்தனை எத்தனையோ வகையான இன்ப துன்பங்களை எப்படியெப்படியெல்லாமோ அனுபவித்து வருகிறார்களே, இவற்றின் காரணமென்ன?

காரணம் வேறொன்றுமில்லை; எல்லாம் தலைவிதி தான். தலைவிதியை மாற்ற அந்தப் பரமனுக்குக்கூட அதிகாரமில்லையாம். அதனால் தான் "அன்றெழுதும் பரமன் அழித்தெழுதப் போவதில்லை" என்ற பழமொழியும் ஏற்படலாயிற்றாம்.

ஆம்; அந்தத் தலைவிதி யாரால், எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது? வேறு ஒருவராலுமல்ல; அவரவராலேயே, முன் சன்மங்களில் ஏற்படுத்திக் கொண்டதுதான்.



மனிதனுக்குப் பணம் அவசியம் வேண்டியதே என்பதை மறுப்பார் எவருமில்லை. ஆனால், பணம் எப்படி வந்தது—வருகிறது—வரும் என்பதைப்பற்றி மட்டும் மிகப் பெரும்பாலோர் சிந்திப்பதில்லை.

நம்மைவிட செல்வத்தில் எவ்வளவோ குறைந்தவர்களும், வள்ளிசாய் பணமே இல்லாதவர்களுமாக எத்தனைபேர் நமது கண்முன் நிற்கின்றனர். அப்படியிருக்க, நாம் மட்டும் பணக்காரர்களாயிருக்கக் காரணமென்ன? நம் மீது தயவுவந்து கடவுள் நமக்குச் செல்வத்தைக் கொடுத்துவிட்டாரா? அல்ல. போன சன்மத்தில் நல்ல புண்ணியங்களை நாம் செய்தோம். அப்புண்ணியங்களின் அளவுக்குத் தக்கபடி பணமுள்ள குடும்பத்தில் கடவுள் நம்மைப் பிறப்பிக்கச் செய்தார் என்பது மட்டுந்தான்.

இது போலவே இனி நாம் அடுத்த பிறவியிலும் பணக்காரர்களாயிருக்க எண்ணினால், அதற்கு வேண்டிய நற்செயல்களை இப்பொழுதே செய்துகொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணம் பண வசதியுள்ள ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தோன்ற வேண்டுவது அவசியமல்லவா?

இனி, நம்மைவிடப் பலதரப்பட்ட பணக்காரர்கள் பலவகையான இன்பங்களை அனுபவித்து மகிழ நாம் மட்டும் ஏழைகளாய் உழன்றுகொண்டிருக்கக் காரணமென்ன? இப்படி ஆவதற்கு ஏதுவான தீச் செயல்களைப் போன சன்மத்தில் செய்ததினாலல்லவா இப்பொழுது இப்படி உழல்கிறோம்? ஆதலால் இனிமேலும், அடுத்த சன்மத்திலும் நல்ல நிலையை அடைவதற்கு வேண்டிய நற்செயல்களை நம்மால் ஆகும் வரையிலும் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணம் ஏழைகளாயுள்ள ஒவ்வொருவருக்கும் தோன்ற வேண்டாமா?

இத்தகைய எண்ணம் பணக்காரர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் தோன்றி விடுமேயானால், உலகத்தில் கொலை, கொடுந் துன்பம், ஏழைகளுக்கு ஆசை வார்த்தைகள் சொல்லி கடைசியில் ஏய்க்கும் நம்பிக்கைத் துரோகம் முதலிய தீச் செயல்கள் இருந்த இடம் தெரியாமற் பறந்து போக மாட்டாவா? *

எனவே, மனிதன் அனுபவிக்கக் கூடிய இன்பமும் துன்பமும் அவன் முன் செய்த நல்வினை தீவினைகளைப் பொறுத்தே யாகும். ஊழ்வினை, பழவினை, தலைவிதி என்பதெல்லாம் இவ்வித நல்வினை தீவினைகளின் தொகுதிக்கு இட்ட பெயர்களாகும். தலைவிதி என்பதற்கு மனிதனால் முன் சன்மங்களின் ஏற்படுத்திக்கொண்ட வினைத்திட்டம் என்பது பொருளாம்.

மனிதன் உடம்பெடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த ஊழ்வினை அவ் வுடம்பை விடாமற் பற்றிக் கொள்கிறது. அதன்படி அவ்வுடம்பு உயிருடன் இருக்கும் வரையும் அவ்வித வினைகளின் பயன்களை அனுபவித்தே யாகவேண்டும். அவ்வினைப்பயன் ஏற்பட்ட அளவிலிருந்து கடுகள

* இவைகளைப் பற்றி "மனிதனும் கடமைகளும்" என்னும் நூலில் விரிவாய்க் காண்க. கிடைக்குமிடம்: "ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

வேனும் குறையவாவது, கூடவாவது, முறை தவறி முன்பின்னாக வரவாவது, துன்பம் அனுபவிக்குங் காலத்து அதை நீக்குவதற்கு ஏதேனும் வகையில் ஒத்தாசை புரியவாவது செய்யமாட்டா. வரவேண்டிய காலத்தில் அவை வந்தே தீரும். செய்தி இப்படியிருக்கும் போது, தீவினை காரணமாக துன்பம் நேரிடுங் காலத்து, 'இப்படி வந்து விட்டதே' என்று மன வருத்தங் கொள்வதிற் பயனொன்றுமில்லை.

"சிறுகா, பெருகா, முறைபிறழ்ந்து வாரா,
உறுகாலத்து ஊற்றாகா, ஆமிடத்தே ஆகும்
சிறுகாலைப் பட்ட பொறியும்; அதனால்
இறுகாலத்து என்னை பரிவு?"

[சிறுகாலை=உடம்பை உயிர் அடையும் காலத்தில், பட்ட=அனுபவிப்பதற்காக ஏற்பட்ட, பொறியும்=எழுதப்பட்ட—அதாவது திட்டப்படுத்தப்பட்ட ஊழ்வினையும், இறுகாலத்து=துன்பம் வருங் காலத்து, பரிவு என்னை=மனம் வருந்துவது எதற்கு]

மேற் சொன்ன நல்வினை தீவினைகளை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை ஈட்டியன, அனுபவிப்பன, அனுபவிக்க வேண்டியன. இவற்றை முறையே சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்றும் சொல்லப்படும்.

சஞ்சிதம் என்பது பல சன்மங்களில் அனுபவித்தது போக எஞ்சிநிற்கும் வினைத்தொகை.

பிராரப்தமாவது: மேற்சொன்ன தொகையிலிருந்து இந்த சன்மத்தில் அனுபவித்துக் கொண்டிருப்பவை.

ஆகாமியம்:—அடுத்த சன்மங்களில் அனுபவிப்பதற்காக இருப்பவை.

ஆம்; மனிதன் இறந்து இறந்து அனேக பிறவிகள் எடுக்கும் போது, ஒரு சன்மத்தில் செய்தவினை, அடுத்த சென்மத்தில் அவனையே தவறாமற் சென்றடையும் என்பது எப்படி?

பசுவின் கன்று மிகச் சிறியதாயிருந்தபோதிலும், பெரிய பசுக்கூட்டத்தின் நடுவில் விடப்பட்டால், அது தனது தாய்ப் பசுவைத் தவறாமல் தேடிக் கண்டுபிடித்து விடும். அதுபோல், உலகத்தில் எத்தனையோ சீவகோடிகள் இருந்தபோதிலும், பழவினையானது தனக்கு உரியவனையே சென்றடையும்.

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை;—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே, தற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

[ஆவுள்=பசுக்களின் நடுவில், குழக்கன்று=மிகச் சிறிய கன்று]

எப்படியாயினும் ஒருவன் முன் செய்த வினைப் பயன்களை அனுபவித்தேயாகவேண்டும். ஆனால், அவன் அறிவாளியாக இருந்து தரும



குணம், பரோபகார சிந்தனை, தெய்வ பக்தி முதலிய நற்கருமங்களைச் செய்து வருவானேயானால், தீவினைப் பயன்களை அனுபவிப்பதில் ஓரளவு சாந்தி பெறுவான்.


அதெப்படி? நற் செயல்களையே செய்து வரக்கூடிய அத்தகைய அறிவாளிகள் இளம் பருவத்திலேயே திடீர் திடீரென்று இறந்துவிடுவதும், மேன்மேலும் தீச் செயல்களையே செய்துவரக் கூடியவர்கள் நெடுங்காலம் உயிர் வாழ்ந்திருப்பதும் சாதாரண வழக்கத்தில் காண்கின்றனவே!

அப்படியல்ல; தீச் செயல்களைச் செய்யக்கூடியவர்கள் மேன்மேலும் கெட்ட கருமங்களைச் செய்து, பின்னும் அதிகமான பாவமூட்டைகளைக் கட்டிக் கொள்வதற்காக நெடுங்காலம் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள். நற்செயல்களைச் செய்து வரக் கூடியவர்கள் தங்களுடைய நன்னடக்கையின் ஏதுவாக தாங்கள் அனுபவிக்குந் துன்பங்களிலிருந்து ஓரளவு சாந்தியடைந்து, அதைவிடப் பின்னும் நல்ல பிறவியை எடுப்பதற்காக, அப்பிறவியிலிருந்து விடுதலை பெறுகிறார்கள் என்றுதான்.

சாரத்தை எடுத்துக்கொண்டு சக்கையை விட்டுவிடுவது போல, இயமனும் அறிவாகிய சாரம் நிறைந்த கல்விமான்களை எடுத்துக்கொண்டு, சக்கையாகிய அறிவில்லாதவர்களை விட்டுவிடுகிறான் என்று ஆன்றோர்கள் கூறுவது மேற் சொன்ன உட்பொருளை மனதில் வைத்துக்கொண்டுதான்.

"பல் ஆன்ற கேள்விப் பயன்உணர்வார் வீயவும்,
கல்லாதார் வாழ்வ தறிதிரேல்—கல்லாதார்
சேதன மென்னும்அச் சேறகத்து இன்மையால்
கோதென்று கொள்ளாதாம் கூற்று"

[ஆன்ற=சிறந்த, வீயவும்=இறந்து போகவும்; சேதனம் என்னும் அச்சேறு=அறிவு என்கிற அந்தச்சாரம், கோது=சக்கை]



# சிவராமன்

(L. V. S. மணியன்)

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

சாயந்திரம் கோட்டைக் கழற்றிக் கொண்டே, (என்ன அவசரம் பாருங்கள்! அன்றையதினம் சாஸ்திரிகளை ஜாதகம் பொருந்தி யிருக்கிறதா என்று பார்க்கச் சொன்னார். ஆனால் தானே சிவராமனை ஆபீஸில் கூப்பிட்டு ஜாதகத்தைக் கேட்டார்.) "மத்தியானம், ஆபீஸில் கேட்டேன். அவனுக்கு ஜாதகமே கிடையாதாம். ரொம்ப நல்லதாச்சு. இந்த தைமாதமே கல்யாணம் நிச்சயம் நடக்க வேண்டும்" என்று கல்யாணராமய்யர், சுந்தரியிடம் சொன்னார். அத்தை வீட்டிலிருந்து வந்திருந்த கோமளம், தனக்குக் கல்யாணப் பேச்சுகள் நடக்கிறது என்பதை மறந்தவளாய் 'யாருக்குக் கல்யாணம் நிச்சயம் நடக்க வேண்டுமப்பா" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'சிவராமனுக்கு' என்று சிரித்துக்கொண்டே சொன்னார் கல்யாணராமய்யர்.

அந்த வார்த்தையைக் கேட்டதும், ஒரு பெரிய இடி இடித்தது போல், கோமளத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. தனக்கு இந்தமாதிரி துரோகம் சிவராமன் செய்வானென்று அவள் நினைக்கவேயில்லை. அவள் ஒன்றும் தோன்றாமல் திகைப் பூண்டை மிதித்தவள் போலானாள்.

"நீ எப்போது வந்தாயம்மா", என்று கல்யாணராமய்யர் கேட்டதும் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "மத்தியானம் வந்தேனப்பா," என்றாள்.

"சரி, எல்லாம் நல்லபடியாக, நாம் நினைத்தபடியே நடக்கிறது. இன்றையதினம் வெள்ளிக்கிழமை. எல்லாரும் கோவிலுக்குப் போகலாம்," என்றார்.

"கோவிந்தன் கூட இன்னிக்கி ஏதோ வேலை யிருக்கிறது. சீக்கிரம் போக வேண்டுமென்று போய்விட்டான். வீட்டிற்கு காவல் யாருமில்லையே," என்றாள் சுந்தரி.

"எனக்கு உடம்பு சரியாயில்லை. நீங்கள் இரண்டுபேரும் கோவிலுக்கு போய்விட்டு வாருங்கள். நான் வீட்டிற்குக் காவல் இருக்கிறேன்," என்றாள் கோமளம்.

அவர்கள் கோவிலுக்குப் போனதும், கோமளம் 'விக்கி விக்கி', அழுது கொண்டே சோபாவில் படுத்துக் கொண்டாள். சோபாவெல்லாம் கண்ணீரால், நனைந்து விட்டது. "சிவராமன் இப்படி செய்வான் என்று நான் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லையே. ஒருவேளை அப்பா விளையாட்டாகச் சொன்னாரா? நான் சிவராமனைக் காதலிப்பது அவருக்கு எப்படித் தெரியும். ஒருநாளும் தெரியாது. பின் ஏன் என்னுடன் விளையாடுகிறார்? விளையாட மாட்டார். நிஜமாகத்தா னிருக்கும்" என்று இந்தமாதிரியெல்லாம் யோசனை செய்துகொண்டு அழுதுகொண்டே யிருந்தாள். அரை



மணி நேரமாயிருக்கும். வாசலில் "ஸார்", என்ற குரல் கேட்டது. இது சிவராமன் குரல்போ லிருந்தது. கோமளத்திற்குக் கோபம் கோபமாக வந்தது. தன்னைத் துரோகம் செய்த சிவராமன் முகத்தில் இனிமேல் அவள் விழிக்க விரும்பவில்லை. ஆகையால் 'ஸார்', என்று கூப்பிடும் சப்தம் காதில் விழுந்தும்; கூப்பிட்டுப் பார்த்துவிட்டுத் தானே போகட்டும் என்று பேசாமல் சோபாவை விட்டு எழுந்திருக்காமல் படுத்துக் கொண்டிருந்தாள்.

நாலைந்து குரல் சிவராமன் கூப்பிட்டுப் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. ஒருவேளை உள்ளே வேலையாக இருக்கிறார்களோ வென்று கூடத்திற்கு வந்தான். கோமளம் அழுது கொண்டிருந்தது தெரிந்தது, யாரோ போல அவனுக்குத் தோன்றிற்று.

"யாரது, கோமளமா அழுகிறது?" என்றான். கோமளம் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். "ஏன் கோமளம் அழுகிறாய்? என்ன நேர்ந்தது?" என்றான். சிவராமன். சிறிதுநேரம் கோமளம் பேசாதிருந்தாள். அன்பு நிறைந்த முகத்துடன் சிவராமன் கேட்கும்போது கோமளத்தின் வைராக்யம் என்ன செய்ய முடியும்?

"நீங்கள், இந்தமாதிரி துரோகம் செய்தால், அழாமல் என்ன செய்வது? தற்கொலை கூடச் செய்து கொள்ளப் போகிறேன்." என்றாள்.

சிவராமனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "என்ன, நானா உனக்குத் துரோகம் செய்தேன்? கோமளம், நீ சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே. நீ தற்கொலை செய்து கொள்ளும்படியான அவ்வளவு பெரிய துரோகம் நான் என்ன செய்தேன்?" என்றான்.

"ஐயோ, பாவம்! உங்களுக்கு தெரியுமா என்ன? ஏன் இந்தமாதிரி பாசாங்கு செய்கிறீர்கள்?" என்று சொல்லிவிட்டு, "அது போகட்டும், உங்களுக்குக் கல்யாணமாமே. பெண் என்ன படித்திருக்கிறாள்? என்னை விட ரொம்ப நன்றாக யிருக்கிறாளாமே! கல்யாணத்திற்குக் கூட கூப்பிடுவேளோ, மறந்து விடுவேளோ! என்னையெல்லாம் இனிமேல் எங்கே ஞாபகமிருக்கப் போகிறது?" என்றாள்.

"என்ன கோமளம், நீயே என்னை கேலி செய்கிறாயே! நானோ பரம ஏழை. எனக்கு நீ கிடைக்கப் போகிறதோ யில்லை. உன்னை கல்யாணம் செய்துகொண்டால் செய்து கொள்வது, இல்லாவிட்டால் பிரம்மசாரியாகவே யிருந்துவிடுவது என்று தான் தீர்மானித்து விட்டேனே! ஏன் என் மனதைத் துன்பப்படுத்துகிறாய்?" என்றான் சிவராமன்.

"ஆமாம், ஆமாம். இனிமேல் இந்தமாதிரிதானே பேசவேண்டும். தப்பித்துக்கொள்ள வேறு வழியேது. பின், அப்பா, உங்களுக்குக் கல்யாணம் என்று சொன்னது பொய்யா? என்ன," என்றாள்.

சிவராமனுக்கு பதில் சொல்லவே தெரியவில்லை. கல்யாணராமய்யர் எல்லா சமாசாரத்தையும் தெரிவித்து விட்டார் என்று அவனுக்குத் தெரிந்து விட்டது.

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? கோமளம், உன் தந்தை எனக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கொடுத்தார். வேலை செய்து வைத்தார். வேலையிலிருந்து எடுக்க வேண்டுமென்று நினைத்தால், நாளைக்கே எடுத்து விடலாம். அவரே பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்றால், செய்துகொள்ள மாட்டேனென்று நான் சொல்ல முடியுமா? நீயே சொல்லு," என்றான்.

இந்த சமயத்தில் வாசலில் யாரோ கனைக்கும் சப்தம் கேட்டது. "அப்பா, வந்துவிட்டார் போலிருக்கிறது. நான் உள்ளே போகிறேன்," என்று கோமளம் போய்விட்டாள். சிவராமன் வெளியே வந்து பார்த்தான். கல்யாணராமய்யர் கையில் பிரசாதங்களுடன் படியேறி வந்து கொண்டிருந்தார்.

சிவராமனைப் பார்த்துவிட்டு, "எங்கே வந்தே, சிவராமா," என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

"கோவிலுக்கு போகும் வழியில் உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்," என்றான்.

"பேசும் குரல் கேட்டதே. யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்," என்று கேட்டார்.

கோமளமும் அவனும் பேசிக் கொண்டிருந்தது, அவருக்குத் தெரிந்து விட்டது என்பதைக் கண்டுகொண்டான் சிவராமன். என்ன சொல்வது என்று சற்று நேரம் அவனுக்குப் புரியவில்லை. பிறகு, "நீங்கள் கோவிலுக்குப் போயிருக்கிறீர்கள் என்றும், வரும் வரையில் துணையிருந்து விட்டுப் போகும்படி கோமளம் சொன்னாள். அதற்குள்ளாகவே நீங்களும் வந்து விட்டீர்கள்," என்றான், சிவராமன்.

கல்யாணராமய்யர் சிரித்துக்கொண்டே, "கோமளம், கால் அலம்ப ஜலம் கொண்டு வா," என்றார்.

கோமளம் ஒரு சொம்பில் ஜலம் கொண்டு வந்தாள்.

"சிவராமனுக்குக் கல்யாணம் என்று உன்னிடம் சாயந்திரம் சொன்னேனே, பெண் யாரென்று உனக்குத் தெரியுமா கோமளம்? சிவராமா, உனக்கும் தெரியாதே! சொல்கிறேன் கேள்......சிரஞ்சீவி சிவராமனுக்கும், சௌபாக்யவதி கோமளத்திற்கும், வருகிற தைமாதம் திருமணம் நடக்கப் போகிறது," என்று சிரிப்புத் தாங்க முடியாமல் சிரித்தார்.

இதைக் கேட்டதும், சந்தோஷத்தால், கோமளத்திற்கும், சிவராமனுக்கும் இந்த உலகில் இருப்பது போலவேயில்லை. இருவர் கண்களும் சந்தித்தன. ஆச்சரியத்தால் சிவராமன் கலெக்டரையும், கோமளத்தையும் மாறிமாறிப் பார்த்தான். அவளும் அப்படியே பார்த்தாள். கல்யாணராமய்யர் களிப்போடு இருவரையும் பார்த்தார்.

பிறகு சிரித்துக்கொண்டே "நீங்கள் இரண்டு பேரும் சற்று முன்பு பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் மறைந்து இருந்து, நான் கேட்டுக் கொண்டிருந்தேன். கோமளம், நீ என்ன அத்தை அசடா யிருக்கிறாயே. படித்த பெண்ணா லக்ஷணமாயில்லையே. நீ தானே எங்களுக்குப் பெண்ணுக்குப் பெண்ணும், பிள்ளைக்குப் பிள்ளையும். உன்னை விட்டால் எங்களுக்கு வேறே யாரு இருக்கா? அப்படி யிருக்கும்போது, நீ சிவராமனைத் தான் கல்யாணம் செய்து கொள்ளுவேன் என்றால், வேண்டாமென்றா சொல்லப் போகிறோம். ஏதோ, தெய்வ சங்கல்பம், நீ நினைத்தபடியே நடந்து விட்டது. அப்படி யில்லாமே, வேறு யாருக்காவது உன்னை நிச்சயம் செய்திருந்தால் அப்போ, என்ன பண்ணுவே? இதற்கெல்லாம் போய், பயப்படலாமா............அண்டா, இதற்காகத்தான் நீயும், இப்ப கல்யாணம் வேண்டாம், இன்னும் இரண்டு மூன்று வருஷமாகட்டும் என்று சொன்னாயோ! பேஷ், இரண்டு பேரும் நல்ல புத்திசாலிகள் தான்," என்றார் கலெக்டர்.



சில வருஷங்களுக்குப் பிறகு. வாசலில், காரின் 'ஹாரன்' சப்தம் கேட்டது. அந்த சப்தத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த கோமளம் அவசர அவசரமாக வாசலுக்கு வந்தாள். கையில் ரோஜாப் பூமாலையுடன் காரிலிருந்து, இறங்கி வந்தான் சிவராமன். அவன் பின்னாலேயே கல்யாணராமய்யர் கையில் 'வாகிங்' ஸ்டிக்குடன் வந்தார்.

"அம்மா, கலெக்டர் வருகிறார்," என்று கோமளம் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

சிவராமனுக்குக் கலெக்டர் வேலையானதைக் குறித்து ஒரு டீ பார்டி நடந்தது. அதற்குப் போய்விட்டுதான் அவன் வந்து கொண்டிருந்தான். கோமளம் அப்படிச் சொன்னதும், சிவராமனும் சிரித்துக்கொண்டே தன் கையிலிருந்த பூமாலையைக் கோமளத்திடம் கொடுத்தான். அதற்குள் சுந்தரி ஆராத்தி கொண்டுவந்து இருவரையும் நிற்க வைத்து எடுத்தாள்.

உள்ளே சென்றதும் சிவராமன் உடைகளைக் களையப் போனான். "கலெக்டர் ஸார், உங்களை இந்தப் பூமாலையோடு பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. கொஞ்சம் இருங்கோ ஸார்," என்று சொல்லிக் கொண்டே, சிவராமன் அவளிடம் கொடுத்த பூமாலையை அவன் கழுத்தில் சிரித்துக்கொண்டே கோமளம் போட்டாள்.

"இந்த கலெக்டர் பதவியெல்லாம் உன்னால்தானே கோமளம் வந்தது. உன் சொற்படியே கேட்கிறேன். வேறு ஏதாவது வேண்டுமா, கேள்," என்று சிவராமன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

"அன்றைக்கு ஒருநாள், "ஒன்றே, ஒன்று யிருக்கிறது, கேட்கிற நான் வரும்போது கேட்கிறேன்" என்று சொன்னேனே உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?" என்றாள்.

"நன்றாக ஞாபகம் இருக்கிறது. என்ன வேண்டும்? கேள்."

"இனிமேல் எல்லாம் என்னால் வந்தது, என்னால் வந்தது என்று நீங்கள் சொல்வதில்லை யென்று சொன்னால் போதும்," என்று ஒரு மோஹனச் சிரிப்பு சிரித்துக்கொண்டே, கோமளம் சொன்னாள்.

"அப்படியே ஆகட்டும்," என்று விளையாட்டாக கோமளத்தின் கன்னத்தைக் கிள்ளிக்கொண்டே சொன்னான், சிவராமன்.

எஸ். எஸ். எல். ஸி. படித்த சிவராமனுக்கு எப்படி கலெக்டர் பதவி கிடைத்து என்று கேட்டு விடாதீர்கள், நேயர்களே! கதைக்குக் காலுண்டா

முற்றிற்று.

# விளங்குகிறதா?

(வீ. செல்வராஜ்.)

மேருமலையை வில்லாக மாற்றினேன். தேவர்களை அதிர்த்தொடுக்கும் அம்புகளாக மாற்றினேன். இன்னும் என்னென்னமோவற்றை என்னென்னவாகவோ மாற்றினேன். எதற்காக மாற்றினேன்? காரணமில்லாமலில்லை. திரிபுரத்தை அழிக்கத்தான்!

அதிருக்கட்டும், தேவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர்கள் வசிப்பது தேவலோகம். அவர்களின் அரசன் தேவேந்திரன். அவர்கள் பாருங்கள்.—தாங்கள் என்னென்னமோ வீரப் பிரதாபங்களையெல்லாம் செய்து விட்டதாகப் பெருமை கூறுவார்கள்; எவனாவது ஒரு அரக்கன் ஏதாவது செய்து விட்டால் போதும்—அவனோடு சண்டை செய்வோம்—சாவோம் அல்லது பிழைப்போம் என்பது கிடையாது.—உடனே, "ஐயோ காப்பாற்று, எங்கள் கூட்டம் போச்சு, ஈசுவரா, மால்மருகா, பிரும்மதேவா!" என்று அலறிக்கொண்டு ஓடி வருவார்கள். அந்த மாதிரியே இப்போதும் என்னிடம் வந்தார்கள்.

அப்போது பார்வதியோடு மனஸ்தாபமாக(அவ்வளவு பெரிய சண்டையல்ல—சின்ன ஊடல் விஷயந்தான்) நான் இந்தப் பக்கமும், அவள் அந்தப் பக்கமுமாகத் திரும்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தோம். அப்போது என் மனம் உண்மையாகவே சிறிது வேதனைப் பட்டுக்கொண்டுதானிருந்தது. அந்தச் சமயத்திற்றான் "குய்யோ முறையோ" வென்ற பெருத்த இரைச்சல் கேட்டது. சிவபூஜையில் கரடி குறுக்கிடுவது என்பது இதுதான். எனக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. சிறிது நேரத்தில், நந்திப் பயல் வந்து, "எசமான், தேவர்கள் வந்திருக்கிறார்கள். நாரதரும் வந்திருக்கிறார். தங்களைப் பார்க்கவேண்டுமாம்" என்று வணங்கினான்.

எனக்கிருந்த கோபத்திலே இந்தக் கைலாயத்தையே ஒரு உருட்டு உருட்டிவிட்டு, அதோடு இந்தத் தேவர்களையும் சேர்த்து ஒரேயடியாய் அழித்து விடுவோமா என்று கூட எண்ணினேன். ஆனால் என் பார்வதி! அவளும் அதோடு அழிந்து போவாளல்லவா! அது ஒரு பக்கம் பயம்; "இப்போது பார்க்க முடியாது" என்று சொல்லி அனுப்பி விடுவோமென்றால், அந்தக் கிராதகன் நாரதப்பயல் இருக்கிறானே—அவன் எல்லோரிடமும் நம் சங்கதியைச் சொல்லி ஊர்சிரிக்க வைத்து விடுவானென்று இன்னொரு பக்கம் பயம். ஒன்றுந் தோன்றாமல், 'வந்து தொலையச் சொல்லு" என்று கோபமாய் நந்தியிடம் சொன்னேன்.

நந்தி முட்டாள் என்ன செய்து விட்டான்—நான் சொன்னது போலேயே, "வந்து தொலைவீர்களாம்" என்று சொல்லி விட்டான்போலிருக்கிறது. அதுதான், தேவர்களுக்கு "லீடர்" ஆன அந்த நாரதன் வந்ததும் வராததுமாய், "என் சுவாமி, வந்து தொலையச் சொன்னீர்களாமே! தேவரீர் இப்படி வாக்கு விடலாமா?" என்று நாசுக்காகக் கேட்டு விட்டான். அப்போதுதான் கோபத்திலே நான் சொன்னதின் கெடுதல் தெரிந்தது. இதற்கு எப்படியும் பதில் சொல்லியாகவேண்டும். இல்லாவிடில் இந்த நாரதன் நம்ம 'குட்டை' உடைத்து விடுவான் பாருங்கள். எப்



பொழுதும் நாரதனைக் கண்டால் உள்ளூரப் பயந்தான். அந்த அகத்தியன் சில நாட்களாக எனக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறான். சிலேடைப் பகுதியை நேற்றுத்தான் சொல்லிக் கொடுத்திருந்தான். அதனால் அந்த ஆயுதத்தைத்தான் உபயோகிக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு, "அப்படி எந்த முட்டாள் சொன்னது? எங்கே அந்த நந்திப்பயல்? 'வந்து தொழச் சொல்லு' என்றால் 'வந்து தொலையச்' சொன்னதாகச் சொல்லலாமா? அந்த அகத்தியனிடம் சொல்லி இவனுக்கும் 'ல'கர 'ழ'கர பேதங்களைச் சொல்லித்தரச் சொல்லவேண்டும். முட்டாள் பயல்" என்று ஒருவாறு முகத்தைக் கோபமாக வைத்துக்கொண்டு, சொல்லி நாரதனை ஏமாற்றி விட்டேன். இதைக்கேட்ட பார்வதியுங்கூட கொல்லென்று சிரித்து விட்டாள். இந்த சந்தர்ப்பத்தை விடாது, (பார்வதியை சமாதானப் படுத்தவேண்டாமா?) நானும் சேர்ந்து சிரித்தேன். அவள் சிரிக்க, நான் சிரிக்க, நாரதன் சிரிக்க, தேவர்கள் சிரிக்க, இந்தச் சத்தத்தைக் கேட்டு என்னவென்று பார்க்கவந்த அந்த நந்தி (காரணந் தெரியாது) சிரிக்க,—இந்தமாதிரி கூட்டத்தோடு கூட்டமாய் நானும் பார்வதியும் மறுபடியும் பேசிக்கொண்டோம்.

எனக்கும் உண்மையாகவே சந்தோஷம் வந்து விட்டது. தேவர்கள் வந்தது நல்ல வேளையாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் நானும் பார்வதியும் ராசியாவது எப்படி? இவ்வளவு சந்தோஷத்திலே தேவர்களுக்கு இரங்காதிருப்பேனா? உடனே, "என்ன நாரதா! என்ன விசேஷம்? எல்லோரும் ஏதோ சந்தோஷத்திலே பூரித்துக் கொண்டிருக்கிறாப் போலிருக்கே!" என்றேன்.

"நன்றாய்ச் சொன்னீர்கள்? நாங்கள் படுகிற அவஸ்தை என்ன!—இதிலே பூரிப்பு வேறா? ஏது, இன்னும் தேவரீர் முகக்குறிப்பை அறிந்து கொள்ள முடியவில்லையே" என்று ஏளனமாய்ச் சொன்னான் நாரதன். இப்படியே நேரம் போனால் காரியம் கெட்டுப்போகும் என்று பயந்த தேவேந்திரன், குயுக்தியாக, "கைலாச வாசா! திரிபுர அரக்கர்கள் செய்யுங் கொடுமை சகிக்க முடியவில்லை. தேவரீர் இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்!" என்று விஷயத்தை பட்டென்று விளக்கினான்.

நானும் நாரதன் சொன்னதைக் கேட்காதவன்போன்று, "ஏன், பிரம்மாவிடம் போகிறதுதானே?" என்றேன்.

"அங்குதான் முதலில் போனோம். அவர், "ஐயையோ, அந்த அரக்கர்களைப்பற்றிக் கேட்டாலே நடுக்க மெடுக்கிறது; இந்தக் காரிகம் என்னாலாகாது—வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கொண்டே ஓடி விட்டார்" என்றான் இந்திரன்.

"பூ! இவ்வளவுதானா பிரம்மன் சக்தி! உம். அப்புறம் உங்கள் திருமால் இருக்கிறானே?" என்றேன்.

"இருக்காமலென்ன? அங்கும் போனோம். அவரும் இதே போன்றுதான் சொல்லிவிட்டார்" என்றான்.

"என்னென்னமோ, ராவணன், இரண்யன் சூரன்-சீரன் முதலியோரை வென்றதாகச் சொல்லுகிறார்கள்—இதற்கு இப்படிப் பயப்படுவானென்று நான் கனவிலும் நினைக்கவேயில்லை" என்று நான் ஏளனமாய்ச் சொல்லி

கொண்டு போவதைத் தடுத்து, "ஆமாம் உங்கள் வெளிச்சம் தெரியாதாக்கும். சும்மா அம்மட்டோடு நிறுத்துங்கள்" என்று ஒரு பூகம்பத்தைக் கிளப்பி விட்டாள் பார்வதி தன் அண்ணனுக்குப் பரிந்துகொண்டு. நான் யாரிடம் வழக்கடித்தாலும் பார்வதியிடம் வாது செய்வதென்றால் என்னால் முடியாது. அதிலும் சற்று முன்புதான் சமாதான மாயிருக்கிறோம். அதற்குள் இந்த வம்பு எதற்கென்று அவள் சொன்னதைக் கேளாதவன் போன்று, தேவர்களைப் பார்த்து, "சரி, இனி ஆகவேண்டிய கதை சொல்லுங்கள்" என்றேன்.

"ஆக வேண்டியதென்ன—தாங்கள் தான் அரக்கர்களை அழிக்கவேண்டும். இதைச் சொல்லிச் சிபார்சு பண்ணவே தேவர்கள் என்னை அழைத்து வந்தனர்" என்றான் நாரதன். நான் ஏதோ யோசிக்கிறவன் போன்று சற்று மௌனமா யிருந்துவிட்டு, "விஷயமோ பெரியதாய்த் தோன்றுகிறது. திருமால், பிரம்மாவும் கூட மாட்டோமென்று சொல்லி விட்டனர் என்று நீங்களே சொலுகிறீர்கள். ஆகையினால் என் ஒருவனால் மட்டும் இக் காரியமாகாது போற்றெரிகிறது. ஆதலால் நீங்களும் உதவிக்கு வரவேண்டும்" என்றேன். அவ்வளவுதான் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தார்கள். சற்றுநேரம் ஏதோ குசுகுசுவென்று பேசினார்கள். கடைசியாக, என்ன நினைத்தார்களோ, எல்லோரும் சரியென்று ஒப்புக்கொண்டார்கள்.

அப்போதுதான் நான் முன் சொன்னதுபோல் அவர்களை ஒவ்வொரு ஆயுதமாக மாற்றிக்கொண்டு திரிபுரம் வந்து சேர்ந்தேன். இனிச் சண்டை தொடங்க வேண்டியதுதான். கோட்டையைப் பார்த்தால் எனக்கே ஆச்சரியமா யிருந்தது. அரக்கர்களோ பெரும் மூர்க்கர்கள். எனக்கோ யோசனை பலமாக வந்து விட்டது. சட்டென்று ஒரு வழி தென்பட்டது.

"தீயைத் தீயினால் அவிக்க முடியுமா? அதற்குத் தண்ணீர் வேண்டும். மிருக பலங் கொண்ட இவ் வரக்கர்களை பலாத்காரத்தால் வென்றால், அதில் இன்னொரு பெரிய பலாத்காரம் ஜனிக்கும். ஹிம்சைக்கு அஹிம்சையே விரோதி" என்று எண்ணியவனாய், என் ஆயுத பலத்தையும், கோபத்தையும், கொடூரத்தையும் மறந்து என் முழு அன்பும், ஜீவகாருண்யமும், அஹிம்சையும் ததும்ப அக் கோட்டையைப் பார்த்து ஒரு புன் சிரிப்புச் சிரித்தேன். என்ன ஆச்சரியம்? கோட்டை சாம்பலாய் எரிந்து விட்டது. எனக்கு வந்த சந்தோஷத்திலே ஒரு துள்ளுத் துள்ளினேன்.

அவ்வளவுதான். பொத்தென்று கீழே விழுந்தேன் நான் படுத்திருந்த கட்டிலிலிருந்து. அடடே, எல்லாம் கனவுதானா? ஆமாம் கனவுதான். நான் திரிபுரத்திலில்லை. என் படுக்கை அறையில்தா னிருக்கிறேன். நான் கண்டது கனவுதான்—ஆனால் வெறுங் கனவல்ல. அது என் கற்பனைக் களஞ்சியத்தைக் கிளறி விட்டுவிட்டது. "உலகம் போற்றும் மகாத்மா காந்தியடிகளின் அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட சத்தியாக்கிரஹத்திற்கும், சிவன் அன்று சிரித்தவுடன் திரிபுரம் அழிந்ததற்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?" என்ற கேள்வியைக் கிளப்பி விட்டுவிட்டது. கனவு கண்ட நான் இக் கற்பனையில் இறங்கி யுள்ளேன். இன்னும் எனக்கு விளங்கவில்லை. தங்களுக்கு ஏதாவது விளங்குகிறதா?

# ஜ்யோதிஷ பல ரகஸ்யம்

(சி. பி. ஆனந்தம்.)

★

## 17. சனி உலகம்

நிலவுலகினுக்குப் பலன் நிகழ்த்தும் 'பஞ்சக் கிரகங்க'ளுள் ஐந்தாவதாக இறுதிக்கண் வருவது சனிக்கிரக மாகும். இதுவரை நாம் 'சுக்ரன்' அல்லது 'வெள்ளி' உலகம் மட்டும் கண்டிருக்கின்றோம். இதை அடுத்துக் காண வேண்டுவது 'சனி உலகின்' விவரங்களைப்பற்றியாகும். இது பலன் நிகழ்த்தும் கோள்களுள் முக்கியமான ஒன்று. அவ்வரிசையில் சுக்ரனை அடுத்து ஐந்தாவதாக இந்தச் சனிக்கிரகம் வருகிறது. சூர்யனை நடுவாக்கி அதனைச் சுற்றி ஓடும் கிரகங்களின் வரிசையில் ஆறாவதாகவும், செவ்வாய்க்கும்-வியாழனுக்கும் இடையே மறைந்துள்ள வொரு கோளையும் சேர்த்துப் பார்க்க ஏழாவதாகவும் சனி உலகம் அமைகின்றது. இதன் சுற்று வீதி (Orbit) சுக்ரனுடையதைப்போல வின்றி நாம் வசிக்கும் பூமிக்கு மேற்கில்—அதாவது நிலவுலகின் சுற்று வீதிக்கு வெளிப்புறத்தே இடம் பெறுகிறது. இவ்வழி அது பூமியிலிருந்து அதன் வெளிப்புறத்தே இடங்கொளும் சுற்று வீதிகளின் வரிசையில் மூன்றாவதாகவும், செவ்வாய்க்கும்—வியாழனுக்கும் இடையே மறைந்துள்ள வொரு கோளின் சுற்று வீதியும் சேர்த்துக் கணக்கிட நான்காவதாகவும் அமைகின்றது.

மேலைநாட்டு வானநூலார் சூர்யனை நடுவாக்கி அதனைச் சுற்றி ஓடும் இறுதிக்கோள் 'சனி' என நெடுநாளாகக் கருதி யிருந்தனர். பின்னர் சமீபத்தில்—அதாவது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியின் நடுவிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆக முறையே இரண்டு பெருங்கோள்கள் சனிக்கு அப்பால் இடங்கொண்டு சூர்யனைச் சுற்றி வருவதாகக் கண்டனர். அவை பற்றிய விவரங்களில் ருசிகரமுள்ள சில பலவற்றைப் பின்னர் காணுவோம்.

### மதி வளையங்கள்

சனி உலகம் இதர கோள்கள் யாவினும் ஒவ்வொரு வகையினும் சிறப்புடைய ஒன்றென அறிகின்றோம். அவ்விதம் சிறப்புக் குரியன பலவும் அதில் இருப்பதை அறிஞர்கள் கண்டிருக்கின்றனர். முதற்கண் அது பிற எவற்றினுக்கும் இல்லாத ஒரு தோற்றத்தைக் கொண்டிருக்கின்றதாம். அதனைச் சுற்றியுள்ள மோதிரம் போன்ற வளையங்களின் மிக ஒழுங்கான தொகுப்பு அதற்குரிய சிறப்பு என்று கூறலாம். இந்தத் தொகுப்பு வேறு எந்தக் கோள்களுக்கும் வாய்க்கவில்லை. இத் தொகுப்பு சனி உலகைச் சுற்றி ஒரே மத்தியையுடைய பெரிய மூன்று வட்ட வளையங்களாகக் காணப்பெறும். இவ் வளையங்கள் கிரமமான ஒரு பொழுதில் மறைந்தும்—மற்றொரு பொழுதில் காட்சிக்குரியதாகத் துலங்கியும் வருகின்றன. சனி உலகினை மிக நெருங்கிய வளையம் கறுப்பு வண்ணத் துள்ளது. வளையங்களின் மட்டம் சுற்று வீதியின் மட்டத்திற்குச் சாய்ந்து அதற்கு நேர் சமமாக விருக்கும். சூரியனை ஒருமுறை சனி சுற்றி வருவதற்கு ஆகும் பொழு

தன் இருமுறை அதன் வளையங்களைப் பூமிக்கு நேராகக் காட்சிக்குரியதாய் வருவதைக் காணலாம். அவற்றின் அருகு அல்லது ஓரம் மிகவும் சரியாய் நன்கு புலனுக்குரியதாக விருக்கும். இவ் வளையங்களின் வெளிப்புற வட்டத்தின் குறுக்களவு ஒரு லட்சத்து எழுபத்து மூவாயிரம் மைல்கள் ஆகும்; அதன் அகலம் ஏறக்குறை பத்தாயிரம் மைல்கள் இருக்கும். அதை அடுத்து இரண்டாவதான வட்டம்—அதாவது நடுவட்டத்தின் அகலம் பதினாயிரம் மைல்கள் உள்ளன. அதை அடுத்த மூன்றாவது வளையம்—அதாவது சனி உலகின் மிக அருகில் உள்ள கறுப்பு வட்டத்தின் அகலம் பதினோராயிரம் மைல்கள் என்கின்றனர். இதற்கும் சனி உலகிற்கும் இடையே ஏழாயிரம் மைல்கள் தூரம் இடைவெளி யிருக்கின்றது. எனினும், சாதாரண திருஷ்டியில் சனி உலகை ஒட்டியே வளையங்கள் அமைந்திருப்பதாகவே தோன்றும். கருவிகள் மூலம் சரியாய்க் காண அவ் இடைவெளி நன்கு புலனாகும். இந்த வளையங்களின் கனம் ஐம்பது மைல்கள் ஆகும்.

இவை மிக விரைவாகச் சனி உலகைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன. ஆராய்ச்சிக்காரர்கள் அவற்றைக் கோடிக்கணக்கான சின்னஞ் சிறு மதிகளின் கூட்டமே என்று கூறுகின்றனர். அவ்வாறு சிறு சிறு மதிகளாய்க் கோளவடிவில் கோடிக்கணக்கில் ஒன்று சேர்ந்து சனிக் கோளின் சிறப்புக்குரிய வட்ட வளையங்களாக அமைந்து அதனைச் சுற்றி வருகின்ற அவற்றிற்குத் தன்னைத்தான் சுற்றிவரும் ஒரு கதியும் இருக்கலாமோ வென்று சந்தேகிக்கின்றனர். அவ்விதம் தன்னைத்தான் சுற்றிவரும் ஒரு கதியை அவற்றிற்குக் கற்பிப்பதில் தக்க ஆதாரங்களை மிகத் தீவிரமாகத் தேடி வருகின்றனர். என்றாலும், அவை சனி உலகைச் சுற்றிவரும் வேகத்தை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டிருக்கின்றனர். உள் வளையத்திலுள்ள சிறுமதிகள் ஐந்துமணிப் பொழுதிலும், வெளி வளையத்திலுள்ளவை பதினான்கு மணிப் பொழுதிலும் சனி உலகை ஒரு முறை சுற்றி வந்து விடுகின்றனவாம். இத்தகைய கோடிக்கணக்கான சிறுமதிக் கூட்டத்தாலாகும் வளையங்கள் சனி உலகுக்கு உண்மையில் அதன் பெருமைக்கும்—சிறப்புக்கும் உரியனவாகின்றதென மதிக்கின்றனர்.

ஆனால், இந்தச் சிறுமதிக் கூட்டங்களைத் தவிர்த்துப் பெருமதிகள் ஒன்பது சனி உலகுக்கு இருக்கின்றன. இவ்விதம் ஒன்பது பெருமதிகளையுடைய 'வியாழ' உலகினைப்பற்றி இது முன் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவ் வொன்பதனுள்ளும் நான்கு நிலவுலகின் மதி அவ்வளவு பெரியன, இதர ஐந்தும் அவற்றினும் சிறியன. சிறுமதி வளையத் தொகுப்பில் வருவனவற்றும் மிகப் பெரியன. வளையத் தொகுப்பி லுள்ளன வடிவிற் சிறியனவே யெனினும் மதிவகுப்பில் வந்து விடக் கூடியனவே. ஆயினும், அவற்றிற்கும்—ஒன்பது பெருமதிகளுக்கும் ஒவ்வொரு வகையினும் அதிகம் வேறுபாடு உண்டு.

சிறுமதிகள் கோடிக்கணக்காகச் சேர்ந்த தொகுப்பான மூன்று வளையங்களின் சம்பந்தம் கொண்ட சனி அண்டத்தின் அதிசயங்களைக் காண அதன் இயற்கை அமைப்புக்களை அடுத்த இதழில் நேயர்கள் எதிர்பார்ப்பார்களாக.

# "எனக்கல்ல, பிறர்க்கே"

(தி. மு. ராஜகோபாலன்.)

உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் சொத்து சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை யிருக்கத்தான் செய்யும். மனிதன் இந்த மண் மீது பிறக்கும்போதே இந்த ஆசையுடன் தான் பிறக்கிறான். சொத்துடைமையைக் கெடுதலென எந்த நூலும், எந்த மதமும் கூறவில்லை. ஈயும், எறும்பும், தேனீயும் கூட தனக்கு வேண்டிய சொத்தைச் சேர்த்துக் கொள்ளுகிறது.

ஆனால் மனித கோடிகள் ஒரு விஷயத்தை மட்டும் கவனிக்கவேண்டும். தாங்கள் சேர்க்கும் செல்வம் சரியான வழியில் செலவழிக்கப்படுகின்றதா என்பதே. செல்வமே எல்லா மாகிவிடாது. ஒரு லக்ஷியத்தை அடைய செல்வம் ஒரு சாதனமாக விருக்கிறதேயன்றி அதுவே அந்த லக்ஷியமல்ல. நாம் கஷ்டப்பட்டு உழைத்ததின் பலன் தான் செல்வம்.

நமது வாழ்க்கை பெரியதொரு தர்ம சொத்தாகும். இந்த சொத்தைக் கடவுளே நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். உலகிலுள்ள சகல மதங்களும் இதைத்தான் சொல்லுகின்றன. நமது சரீரங்கள் ஆண்டவனின் ஆலயங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே நமது திறமையினாலும், அபாரசக்தி காரணமாகவும் நாம் உற்பத்தி செய்யும் பொருள்களையும், நாம் சேகரிக்கும் சொத்தையும், நாம் சம்பாதிக்கும் செல்வத்தையும் நம்முடைய சொந்த நன்மைக்காக உபயோகித்துக் கொள்ளக்கூடாது. நம்மிடம் உள்ளது பிறர் எவரிடம் இல்லையோ, பிறர் எவருக்குத் தேவையோ, அவர்களுக்கு அதைக் கொடுத்து விடவேண்டும். "உயிரனைத்தும் ஈசன் கோவில்" என்பதை நாம் நினைவி லிருத்தவேண்டும். ஏழைகளிடமே கடவுள் வசிக்கின்றார். ஆகவே ஏழைகளுக்காக உழைப்பது தெய்வப்பணி யாகும்.

ஆகவே, நம்மிடமுள்ள சொத்தை நாம் பிறரது உதவிக்காகச் செலவழிக்காமல் சுயநலத்திற்காக உபயோகித்துக் கொண்டால் அதுதான் தீங்கு விளைக்கும். இதனால் நாம் பல கேடுகளை அனுபவிக்கிறோம். கணவனின் காம இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காக மனைவி இருக்கிறாள் எனக் கருதப்படுமானால் அந்த வீடு வீடே யல்ல. அது விலைமாதர் வசிக்கு மிடத்திற்குச் சமமாகி விடுகிறது. மனிதன் ஈசுவரனால் தனக் களிக்கப்பட்ட எந்த விசேஷத் திறமையையும், புத்தியையும், சக்தியையும், தனது சொந்த நலனுக்காகப் பயன் படுத்திக்கொள்வது பெரும் பாவமாகும். பிறர்க் குழைக்கவே உடலெடுத்தோம் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

நாம் பிறர்க் குழைப்பதற்குச் செல்வம் இடையூறாக இருக்குமானால் அத்தகைய செல்வத்தை விட்டொழிக்க வேண்டுமென்றே மதங்கள் எல்லாம் கூறுகின்றன. இங்ஙனமே உயர்ந்த லக்ஷியங்களை அடையும் முயற்சிக்கு குடும்பம் தடை செய்யுமானால் குடும்ப வாழ்க்கையை விட்டு விடுவதே மேலானது. எவன் தனது இதயத்தில் ஆண்டவனை இருத்திக்கொள்ளுகிறானோ, எவன் பிறரையும் தன்னைப்போல பாவிக்கிறானோ, எவன் தனது

# வாந்திபேதி

(R. சுந்தரவிநாயகம்.)

வாந்திபேதி வெறுங் கண்ணுக்குத் தெரியாத ஒரு பூச்சியினாலுண்டாகும் ஒரு வியாதி. இது காற்புள்ளி வடிவமானதாகையினால், இதைக் காற்புள்ளி வாந்திபேதி விஷக்கிருமி (virgule olu cholera) என்றழைக்கப்படும். இக் கொடிய வியாதி சில மணி நேரங்களில் மரணத்தில் கொண்டு போய்விடும். இதனால் முக்கியமாக தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்திரம் ஒரு வாரத்தில் நூற்றுக்கணக்கான மரணங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆகையினால், வாந்திபேதியைத் தடுப்பதற்குரிய முறைகளை ஞாபகத்தில் நன்றாக நிறுத்திக் கொள்ளவேண்டும். அன்றியும் உங்கள் சுற்றுப் புறங்களிலுள்ள குடும்பத்தாருக்கும், சிநேகிதர்களுக்கும், உங்கள் கிராம ஜனங்களுக்கும் இவைகளை எடுத்துரைக்கவேண்டும்.

## வாந்திபேதியைக் கண்டுபிடிப்பது எப்படி ?

நல்ல சுகத்திலுள்ள ஒருவனுக்கு தண்ணீரைப் போன்றதும் விடாமலுள்ளதுமான பேதியும், வாந்தியும் உண்டாகும். இவ் வாந்திபேதியால் வியாதியஸ்தன் மூத்திரம் இருக்கமாட்டான், அவன் உடல் குளிர்ந்து விடும். ஞாபகத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டிய முக்கிய நான்கு அறிகுறிகளாவன: பேதி, வாந்தி, மூத்திரம் நின்றுவிடுதல். குளுமை. இவ்வாறு வாந்திபேதியை அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறுள்ள வியாதியஸ்தரை நீங்கள் கண்டால், அருகிலிருக்கும் ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டருக்கு உடனே தெரியப்படுத்துங்கள்.

## வாந்திபேதியின் விஷக்கிருமி வியாதியஸ்தரின் உடலில் எங்கே இருக்கிறது ?

அது ஜீர்ணக்குழாயில் இருக்கிறது. அது பெருகும் இடம் மனிக் குடல்தான். வாந்தியினாலும், பேதியினாலும் அது வெளியிலுள்ள குடிசை, அல்லது வீட்டின் தரையிலும், வியாதியஸ்தரின் புடவைகள் அல்லது வேஷ்டிகளின் பேரிலும், படுக்கையிலும் வந்து விழுகிறது.

---

உடலையும், சொத்தையும், தன்னிடமுள்ள யாவற்றையும், பிறர் சேவைக்கு அர்ப்பணம் செய்கிறானோ அவனே உத்தமன். அவனே அமரன்.

நம்மிடமுள்ள செல்வம் நம்முடையதல்ல; நம்முடைய சொந்த உபயோகத்திற்காக ஆண்டவன் அதை நம்மிடம் கொடுக்கவில்லை. இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவவே அது நம்மிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை அறிந்து நடப்பவனே ஆண்டவனின் அன்புக்குப் பாத்திரனாகின்றான். "எல்லாம் எனக்கு" என்ற எண்ணம் ஒழிந்து "எல்லாம் பிறர்க்கு" என்ற மனப்பான்மை ஒவ்வொருவரிடமும் உண்டாகவேண்டும்.



## வாந்திபேதி எப்படி உண்டாகிறது ?

வாந்திபேதி உண்டாவதற்கு விஷக்கிருமிகள் ஜீர்ணக்குழாய்க்குள் புகுந்து விட்டாலே போதுமானது. இது இரண்டுவிதமாக ஏற்படக் கூடும். (1) நேரான தொற்றுதலினால் அதாவது நோயாளியின் துணியிலும், மலத்திலும், வாந்தியிலும், வீட்டின் தரையிலும் குவிந்து கிடக்கும் விஷக்கிருமி, அங்கிருந்து நேராக, நோயாளியின் அருகிலிருப்பவரும், அவர் துணியைத் தொடுபவருடைய வாயில் புகுந்து விடும். புகுந்தவுடனே அவருக்கும் வாந்திபேதி உண்டாகி விடும். காரைக்காலைச் சேர்ந்த நெடுங்காட்டுக்குப் பக்கத்தில் பொன்பேத்தி என்ற கிராமத்தில் சுமார் ஒரு மாதத்திற்கு முன் நடந்த சம்பவத்தை உங்களுக்கு உதாரணமாகக் கூறுகிறேன். ஒரு குடிசை வீட்டில், தகப்பன், தாய், 12 வயதுள்ள மகன் ஆகிய மூவரும் வசித்தார்கள். தகப்பனுக்கு பேதி கண்டது. உடனே அவர் அவ் வீட்டின் ஒரு மூலைக்குக் கொண்டு போகப்பட்டார். தரையில் அதிகமாக வாந்தி எடுத்தார். ஜலம் போன்ற அவர் மலம் அவருடைய வேஷ்டியை நனைத்து அழுக்காக்கிற்று. சிறு பையன் அப்போது வீடு முழுமையும் அலைமோதினான். மனைவியோ தன் புருஷனைத் தாங்கினாள். அவன் வாயைத் துடைத்தாள். அழுக்குச் சோமனை மாற்றினாள். சாப்பாட்டு நேரத்தில் அவர்கள் கைகளைக் கழுவவில்லை. விஷக் கிருமிகளினால் மூடப்பட்டிருந்த அழுக்குக் கைகளினால் சோற்றைச் சாப்பிட்டார்கள். அடுத்தநாள் தாயும் பிள்ளையும் வாந்தி பேதியால் பீடிக்கப்பட்டார்கள். வெகு சீக்கிரத்தில் இருவரும் இறந்தார்கள்.

வாந்திபேதி நோயாளியைச் சமீபிக்கிறவர்களுக்கும், அவரைச் சௌகரியப் படுத்துகிறவர்களுக்கும், அதே வீட்டில் வசிக்கும் பந்துக்களுக்கும், அந்த வீட்டில் நுழையும் அண்டை வீட்டுக்காரர்களுக்கும், பிணத்தைப் புதைப்பவர்களுக்கும், இவ்வியாதி நேராக தொற்றக்கூடும்.

(2) மறைவான தொற்றுதலினால்:—இரண்டாவது விதமாக உண்டாகும் வாந்திபேதியே மறைவான தொற்றுநோய். முதற்சொன்ன (நேரான தொற்றுதலினால்) விஷக்கிருமி நோயாளியிடமிருந்து நேராக நோயாளியோடோ அல்லது அவர்கள் கையாண்ட பொருள்களோடோ தொடர்புள்ளவர்களின் வாயில் செல்லுகின்றன. மறைவான தொற்றுதலில் கிருமி நோயாளியின் மலத்தினாலும், வாந்தியாலும் அசுத்தப்பட்ட தண்ணீரால் பொதுவாகக் கொண்டு வரப்படுகிறது. அப்போது அந்தத் தண்ணீர் பிராணாபத்தை விளைவிக்கும் விஷக் கிருமிகளைக் கொண்டிருக்கும். அந்தத் தண்ணீரை அருந்தும் யாவரும் இவ் வாந்திபேதியால் அத்தருணமே பீடிக்கப்படுவார்கள்.

## வாந்திபேதியினின்றும் தப்புவதெப்படி ?

இவ் வியாதி எவ்வாறு பரவுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் போது, இவ் வியாதி தொடராமலிருப்பதற்கு, எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யலாகாது என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

(1) உங்கள் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் இவ் வியாதி இருந்தால், அவ் வீட்டிற்குள் நுழையாதீர்கள். எதிரிலே போகாதீர்கள். உங்

கள் கால்களின் மூலம் உங்கள் சுத்தமான வாசஸ்தலத்திற்கு விஷக்கிருமிகளைக் கொண்டுவந்து விடக்கூடும்.

(2) உங்கள் வீட்டில் இவ் வியாதி இருந்தால் கூடுமான வரையில், நோயாளியை ஒரு தனி இடத்தில் வைக்கவும். பிள்ளைகளை அது சமயம் தரையில் ஓடி யாடும்படி விடாதீர்கள். முக்கியமாக நோயாளி இருக்கும் இடத்தில் தான்.

ஒரு பேர்வழிதான் இவ் வியாதியை அணுகி குணப்படுத்த வேண்டும். அவருடைய படுக்கையையும், துணிகளையும், தரையையும் தொட்டவுடன், உடனே நன்றாகக் கைகளைக் கழுவவேண்டும். சாப்பிடுவதற்கு முன் கைகளைச் சவுக்காரத்தினால் நன்றாகக் கழுவுங்கள். வாந்திபேதி அசுத்தக் கைகளினால் உண்டாகும் வியாதியாகத்தா னிருக்கிறது. இக்கோரான தொற்றை நீங்கள் கைக்கொள்ளும் சுத்தமான முறை ஒன்றினால்தான் தவிர்க்கவேண்டும்.

இவ் வியாதி மறைவான தொற்றுதலால் பீடிக்காமலிருக்க, அதாவது கிருமி பீடிக்கப்பட்ட தண்ணீரைக் குடித்தும், நோயாளியின்மேல் உலாவி விட்டு வந்த ஒரு ஈ மொய்த்த பலகாரத்தைச் சாப்பிட்டும், இவ் வியாதி பீடிக்கப்படலாம். இதற்கு என்ன செய்யவேண்டும்?

(1) குட்டைகள், வாய்க்கால்களிலுள்ள தண்ணீரைக் குடிக்கலாகாது. குழாய்த்தண்ணீரையும், கிணற்றுத் தண்ணீரையும் குடிப்பது நல்லது.

(2) சமையல் பாத்திரங்களையும், கண்ணாடிப் பாத்திரங்களையும், குளம், வாய்க்கால்களிலுள்ள தண்ணீரில் கழுவலாகாது. ஈ மொய்க்காதபடி தின்பண்டங்களை வைக்கவேண்டும்.

குளத்து நீரையும், வாய்க்கால் நீரையுமே உபயோகிக்கும் சில கிராமங்களும் உண்டு. அவ்வாறாயின் அல்லது கிணற்று நீரையே உபயோகித்தாலும் சரி, நீக்க முடியாததும், சுலபமானதுமான ஒரு முறையை நீங்கள் கையாள வேண்டும்.

(1) குடிப்பதற்கு முன் ஜலத்தை நன்றாய்க் கொதிக்க வையுங்கள்.

(2) கொதிக்கும் ஜலத்தில் பாத்திரங்களைக் கழுவுங்கள்.

(3) வெந்நீரிலேயே குளியுங்கள்.

(4) வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.

மேற்கண்ட நான்கு முக்கிய முறைகளையும் நீங்கள் அறிந்து அதன்படி ஒழுகினால், வாந்திபேதியால் பீடிக்கப்பட மாட்டீர்கள்.

---

## சித்திரபானு௵ மார்கழி௴ நவக்கிரக நிராயன சுத்த ஸ்புடம்

(இந்தியா ஸ்டாண்டர்ட் கடியார மணி-சென்னை காலை 7-மணிக்கு)

| தேதி | நக்ஷத்திர ஹோரை | | | சூரியன் | | சந்திரன் | | அங்காரகன் | | புதன் | | குரு | | சுக்கிரன் | | சனி | | ராகு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ம | நி | ச | பா | க | பா | க | பா | க | பா | க | பா | க | பா | க | பா | க | பா | க |
| 1 | 5 | 35 | 58 | 240 | 23 | 344 | 19 | 215 | 59 | 249 | 03 | 88 | 47 | 246 | 31 | 45 | 08 | 124 | 53 |
| 2 | 5 | 39 | 54 | 241 | 24 | 357 | 20 | 216 | 38 | 250 | 42 | 88 | 41 | 247 | 44 | 45 | 04 | 124 | 50 |
| 3 | 5 | 43 | 51 | 242 | 25 | 10 | 22 | 217 | 18 | 252 | 21 | 88 | 34 | 248 | 57 | 44 | 59 | 124 | 47 |
| 4 | 5 | 47 | 47 | 243 | 26 | 23 | 09 | 218 | 00 | 253 | 54 | 88 | 27 | 250 | 10 | 44 | 55 | 124 | 44 |
| 5 | 5 | 51 | 45 | 244 | 28 | 35 | 57 | 218 | 42 | 255 | 27 | 88 | 20 | 251 | 23 | 44 | 51 | 124 | 40 |
| 6 | 5 | 55 | 41 | 245 | 29 | 48 | 16 | 219 | 27 | 256 | 54 | 88 | 13 | 252 | 37 | 44 | 47 | 124 | 37 |
| 7 | 5 | 59 | 38 | 246 | 31 | 60 | 36 | 220 | 12 | 258 | 21 | 88 | 05 | 253 | 51 | 44 | 42 | 124 | 33 |
| 8 | 6 | 03 | 34 | 247 | 32 | 72 | 38 | 20 | 57 | 259 | 47 | 87 | 58 | 255 | 05 | 44 | 38 | 124 | 30 |
| 9 | 6 | 07 | 31 | 248 | 33 | 84 | 41 | 221 | 42 | 261 | 14 | 87 | 50 | 256 | 19 | 44 | 34 | 124 | 27 |
| 10 | 6 | 11 | 27 | 249 | 34 | 96 | 48 | 222 | 26 | 262 | 40 | 87 | 43 | 257 | 33 | 44 | 30 | 124 | 24 |
| 11 | 6 | 15 | 24 | 250 | 36 | 109 | 06 | 223 | 11 | 264 | 07 | 87 | 35 | 258 | 47 | 44 | 25 | 124 | 20 |
| 12 | 6 | 19 | 20 | 251 | 37 | 120 | 54 | 223 | 56 | 266 | 04 | 87 | 27 | 260 | 01 | 44 | 21 | 124 | 17 |
| 13 | 6 | 23 | 17 | 252 | 39 | 132 | 42 | 224 | 41 | 268 | 01 | 87 | 19 | 261 | 15 | 44 | 16 | 124 | 14 |
| 14 | 6 | 27 | 13 | 253 | 40 | 145 | 26 | 225 | 21 | 269 | 15 | 87 | 12 | 262 | 29 | 44 | 12 | 124 | 11 |
| 15 | 6 | 31 | 10 | 254 | 42 | 158 | 11 | 226 | 02 | 270 | 30 | 87 | 04 | 263 | 43 | 44 | 07 | 124 | 07 |
| 16 | 6 | 35 | 06 | 255 | 43 | 171 | 25 | 226 | 39 | 271 | 32 | 86 | 57 | 264 | 57 | 44 | 02 | 124 | 04 |
| 17 | 6 | 39 | 03 | 256 | 44 | 184 | 39 | 227 | 16 | 272 | 35 | 86 | 49 | 266 | 11 | 43 | 57 | 124 | 00 |
| 18 | 6 | 42 | 59 | 257 | 45 | 198 | 21 | 227 | 5[illegible] | 273 | 38 | 86 | 42 | 267 | 25 | 43 | 52 | 123 | 57 |
| 19 | 6 | 46 | 56 | 258 | 47 | 212 | 04 | 228 | 29 | 274 | 41 | 86 | 34 | 268 | 39 | 43 | 47 | 123 | 54 |
| 20 | 6 | 50 | 52 | 259 | 48 | 226 | 09 | 229 | 05 | 275 | 44 | 86 | 26 | 269 | 53 | 43 | 42 | 123 | 51 |
| 21 | 6 | 54 | 49 | 260 | 50 | 240 | 15 | 229 | 42 | 276 | 47 | 86 | 18 | 271 | 08 | 43 | 37 | 123 | 48 |
| 22 | 6 | 58 | 45 | 261 | 51 | 254 | 37 | 230 | 18 | 277 | 50 | 86 | 11 | 272 | 22 | 43 | 32 | 123 | 44 |
| 23 | 7 | 02 | 42 | 262 | 52 | 268 | 59 | 230 | 55 | 278 | 53 | 86 | 04 | 273 | 37 | 43 | 27 | 123 | 41 |
| 24 | 7 | 06 | 38 | 263 | 53 | 283 | 09 | 231 | 33 | 279 | 49 | 85 | 57 | 274 | 50 | 43 | 24 | 123 | 38 |
| 25 | 7 | 10 | 36 | 264 | 54 | 297 | 20 | 232 | 12 | 280 | 46 | 85 | 49 | 276 | 03 | 43 | 20 | 123 | 34 |
| 26 | 7 | 14 | 32 | 265 | 55 | 311 | 21 | 232 | 52 | 281 | 37 | 85 | 42 | 277 | 14 | 43 | 18 | 123 | 31 |
| 27 | 7 | 18 | 29 | 266 | 56 | 325 | 22 | 233 | 33 | 282 | 28 | 85 | 34 | 278 | 26 | 43 | 16 | 123 | 27 |
| 28 | 7 | 22 | 25 | 267 | 56 | 339 | 01 | 234 | 13 | 283 | 18 | 85 | 27 | 279 | 38 | 43 | 14 | 128 | 24 |
| 29 | 7 | 26 | 22 | 268 | 57 | 352 | 40 | 234 | 54 | 284 | 09 | 85 | 19 | 280 | 50 | 43 | 13 | 123 | 21 |

### ஆகாயக் காட்சி.

இம்மாதம் வானத்தே எதுவும் காட்சிக்குரிய பொழுதில் நேருவதில்லை.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

சித்திரபானுஸு மார்கழிீ—கலியுகாதி 5044, சாலிவாகனம் 1865,
பசலி 1352, கொல்லமாண்டு 1118, ஹிஜரா 1361-62,
இங்கிலீஷ் 1942ஸு டிஸம்பர்ீ—1943ஸு ஜனவரிீ

| மார்கழிீ | டிசம்பர்ீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | புத | நவ21-32 | உட் 12-1 | சி12-1ம | தனுர்மாத பூஜை ஆரம்பம் |
| 2 | 17 | வியா | தச21-1 | ரே13-12 | சி13-12அ | விதை விதைக்க |
| 3 | 18 | வெள் | ஏகா21-37 | அசு14-25 | அ14-25சி | வைகுண்ட ஏகாதசி, முக்கோட்டி ஏகாதசி |
| 4 | 19 | சனி | து22-49 | ப✲17-23 | சி17-23அ | கிருத்திகை விரதம் |
| 5 | 20 | ஞா | திர25-13 | கிரு21-1 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க [தசி |
| 6 | 21 | திங் | சது28-41 | ரோ25-49 | சித்60 | கரிநாள், பாஷாண சதுர்த் |
| 7 | 22 | செவ் | ○33-37 | மிரு 31-47 | சி31-47ம | ஆருத்ரா சிவபூஜா |
| 8 | 23 | புத | பிர39-35 | திரு 38-25 | சித்60 | ஆருத்ரா தரிசனம் |
| 9 | 24 | வியா | துதி45.1 | புன45-1 | அமி60 | கரிநாள், சுபகாரியம் |
| 10 | 25 | வெள் | திரு49-49 | பூச51-2 | மர60 | வியாதியஸ்தர் [விலக்க குளிக்க |
| 11 | 26 | சனி | சது54-1 | ஆயி56-25 | ம56-25அ | நவகிரகசாந்தி செய்ய |
| 12 | 27 | ஞா | பஞ்57-36 | மக60-0 | மர60 | திருதினஸ்பிருக் |
| 13 | 28 | திங் | சஷ்60-0 | மக1-13 | ம1-13சி | கற்போட்ட மாரம்பம் |
| 14 | 29 | செவ் | சஷ்0-2 | பூர4-49 | சி4-49அ | திஸ்ரோஷ்டகா |
| 15 | 30 | புத | சப்0-36 | உத்7-13 | அ7-13ம | |
| 16 | 31 | வியா | அ0-36 நவ58-48 | அஸ்7-49 | சித்60 | |
| 17 | 1 | வெள் | தச56-25 | சித்7-48 | சித்60 | |
| 18 | 2 | சனி | ஏகா52-48 | சுவா6.1 | அ6-1சி | |
| 19 | 3 | ஞா | து48-35 | வி4-11 | மர60 | |
| 20 | 4 | திங் | திர43-48 | அ1-13 கே57-36 | சித்60 | |
| 21 | 5 | செவ் | சது37-43 | மூல53-24 | அ53-24சி | |
| 22 | 6 | புதன் | அ●31-48 | பூரா49-13 | அமி60 | சர்வத்திர அமாவாசை |
| 23 | 7 | வியா | பிர25-48 | உத்45-1 | சித்60 | புஷ்ய சுத்தம் |
| 24 | 8 | வெள் | துதி20-25 | திரு 41-25 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 25 | 9 | சனி | திரு15-1 | அவி37-48 | ம37-48சி | மாச சதுர்த்தி |
| 26 | 10 | ஞா | சது9-36 | சத35-23 | சித்60 | சர்போட்ட நிவர்த்தி, உத்திராடம் 1ல் ரவி ஈ42-51 |
| 27 | 11 | திங் | பஞ்5-24 | பூர33-1 | பி31-48சி | சஷ்டி விரதம் |
| 28 | 12 | செ | சஷ் 2-25 | உட்31-48 | அ33-1சி | விதை விதைக்க |
| 29 | 13 | புத | ச-ப்037 அஷ்59-24 | ரே32-25 | மர60 | அவமாகம், போகி பண்டிகை. |

1943 ஜனவரிீ

| | | | |
|---|---|---|---|
| | | சனி | குரு |
| கே | 14-மகா-புத<br>20-மகா-சுக் | | |
| | | | ராகு |
| ஞா-பு சுக் | அங் | | |

EDITED, PRINTED & PUBLISHED BY N. MUNISAWMY MUDALIAR,
AT THE " ANANDA BODHINI " PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

# ஆனந்தபோதினி
# பாவ ஸ்புட கணனம்

## ஜோதிடர்களுக்கு உற்ற தோழன்.

12 பாவங்களையும் எளிதில் ஸ்புடம் பண்ணி ஜாதகங்களைக் கணிப்பதற்கும், பல பாவ நிர்ணயங்களுக்கு முக்கியமாக வேண்டிய எல்லா விவரங்களையும் அறிவதற்கும் இது பேருதவியாக இருக்கும். ஜோதிட சாஸ்திரத்தில் சாதாரண ஞானமுடையவர்களுங் கூட, இப் புத்தகத்தின் உதவியைக் கொண்டு எளிதாகக் கணனங்களைச் செய்துகொள்ளலாம்.

இதன் விலை ஒன்றரை ரூபாய்தான்.

சிறு கதை உலகில் ஒரு பெரும் புரட்சி!

## "ஜீவா" தீட்டிய உயிரோவியம்

"உயிரோவியத்தை, நான் ஒரே மூச்சில் படித்தேன் என்றால், அது எவ்வளவு ஸ்வாரஸ்யமாகவும் இனிப்பாகவும் இருக்கவேண்டும் என்று நான் சொல்லவும் வேண்டுமா?

தூய்மை என்று அசடு தட்டாமலும் கவர்ச்சி என்று சிற்றின்ப மயமாக்காமலும் காதலை எழுத்துச் சித்திரத்தில் வரைவது மிகவும் கடினமான வேலையாகும். இந்த அபூர்வமான வேலையை "ஜீவா" கலையழகு வாய்ந்த எழுத்துத் திறனுடன் செய்து முடித்திருக்கிறார் என்பது என் கருத்து.

உயிரோவியத்தை உடனே படியுங்கள் என்று நான் சிபாரிசு செய்கிறேன்" என்று "நவயுகம்" ஆசிரியர்-ஸ்ரீ. வ. ரா. இக்கதைக்கு எழுதிய முகவுரையில் எழுதியிருக்கிறார்.

இதன் விலை அணா 12. (தபாற் செலவு அணா 5.)

இந்திர கவச மென்னும்
## சர்வ தேவதா வசியம்

(பீஜாக்ஷர யந்திரங்களடங்கியது)

இதில் ஒவ்வொரு தேவதைக்கும் மூல மந்திரங்களும், யந்திரங்களும், பூஜைகளும், தண்ணீர் மந்திரித்தல், வேப்பிலை மந்திரித்தல், வீபூதி பிடித்தல், பிசாசு விலக்கல். கழிப்புக் கழித்தல், மந்திரங் கட்டல் முதலியவைகளும். நக்ஷத்திர பலாபலன்களும் அவற்றிற்குச் சாந்திகளும் வெகு தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

முதல் பாகமும் இரண்டாம் பாகமும் சேர்ந்து விலை ரூபா 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# அயக்காந்த சத்தின் திராவகம்

இந்தத் திவ்ய ஔஷதம், விஷ சுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து வெளுத்துப்போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டுப் பலமற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி காட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம்மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீர்ண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாது விருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.



இம்மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வலிவுள்ள மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆணபெண் இருபாலரும் எப்பொழுதும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்ஸ் தண்ணீர் அல்லது பசும் பாலில் 10, 12 துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6, 7 துளிகள் வரையிலும் காலை மாலை இரு வேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும்பொருட்டே மிகக் குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒரு மாதம் சாப்பிடக்கூடிய மருந்தின் விலை அணா 12. தபாற் செலவு வேறு.


---

தனலட்சுமி கம்பேனி, நே. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்

---

**3 கைக்கடிகாரங்கள் 455 வெகுமதிகளுடன் ரூ. 1—8—0 தான்.**

ரூ 1—8—0 க்கு எங்களது 2 புட்டி ஓட்டோகுலாப் அல்லது 4 டிப்பி ஜார்தா வாங்குகிறவர்களுக்கு உறுதியான இயந்திர அமைப்பும் சரியான காலமும் காட்டக்கூடிய 12 வருஷம் உத்தரவாதமுள்ள ஒரு கைக்கடிகாரமாவது அல்லது 300 அடி சுற்றளவு வெளிச்சம் தாக்கூடிய ஒரு டார்ச்லைட்டாவதும் 1 ஸேப்டி ரேஸர்கத்தி, 1 புரஷ், 1 சீப்பு, 1 சோப்பு 1 முகம்பார்க்கும் கண்ணாடி, 1 ரோல்டுகோல்டு கில்ட்டம்மி கைக்கடிகாரம், ஒரு லெட் பொத்தான், ஒரு ஜதை ஜின்பிரஸர்வர் (தயவு செய்து உங்கள் பாத அளவை அனுப்பவும்) 390 லோஸன்கள் 1 டம்மி அழகிய கைக்கடிகாரம் 52 விளையாடும் சீட்டுகள் 1 மோதிரம் 1 ஹோல்டர் பேனா பரிசளிக்கப்படும்.



பாக்கிங்கும் தபாற் சார்ஜும் அணா 14.

BENGAL WATCH COMPANY. (A. B.)
1/1 A. Raj Narain Biswas Lane, P. O. Hatkhola, Calcutta.

# புத்திர சந்தான எண்ணெய்




ஆண்மலடு சொன்னாலும் சொல்லலாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரிசேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டா
ஓங்கார பிராணவத்தில் வாயு சேர்ந்தால் [ல்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்துவிடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோறி பற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கியிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1 அல்லது 2 காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறு மாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயில் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

# சீதபேதி (டிசென்டரி) பவுடர்



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடிவயிற்று நோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் தடுக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.

# குழந்தை கக்கிருமல் நிவாரணி

இம்மருந்து கக்குவானால் கஷ்டப்படும் பிள்ளைகளுக்கு ஓர் ரக்ஷிணி. இது வெகு சீர்த்தியாகவும், சுகமாகவும், குழந்தைகள் சாப்பிடுவதற்கு இனிப்பாக இருக்கும். இரண்டு மூன்று நாட்களில் கக்கிருமல் நேரம் பொறுத்து கொஞ்சம் கொஞ்சமாக வந்து சில நாளைக்குள் பூர்த்தியாக குணத்தைத் தரும். இதை உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

---

தனலட்சுமி கம்பெனி, 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்

# மதன கோலாகல தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், உலக இச்சை இல்லாதவர்களும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒருவிதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும். இதுவன்றி வேறு எந்த நோயினாலுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விருத்தியை யுண்டாக்கி நரம்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.



இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டு சிறந்த கைபாக செய்பாகங்களாய் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

# சர்வபடை சம்மாரன்



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு விலை அணு 4. தபாற்கூலி வேறு.

# கண்நோய் மருந்து



இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச்சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை.

புட்டி 1-க்கு அணு 8. தபாற்கூலி வேறு.

**தனலட்சுமி கம்பெனி, நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்**

# சர்வமேக நிவாரணத் தைலம்




இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால் வாதம், குதிகால் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், தேிர, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்பாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமடங்கி உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1—8—0. தபாற்கூலி வேறு.

# எலிக்ஸ்லைரன்

மேகரோக நிவாரணி!
தாது விருத்திக்கு நிகரற்றது!!
மலையாள அஷ்டாங்க முறைப்படி மலையாளத்தில் தயார் செய்தது.

பத்தியம் கிடையாது. ருசிகரமானது. இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும், தசை விருத்திக்கும், தாது பலத்திற்கும் இது ஒரு அமிர்த சஞ்சீவியாகும். நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மேகவியாதி, துர்நீர், மூலச்சூடு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, லிங்கப் புண், லிங்கப் புற்று, மேகப் படைகள், உடம்பு ஊரல், அஜீரணம், மலச்சிக்கல், கைகால் நோவு, மயக்கம், இடுப்பு வலி, மூத்திரநோய் முதலிய எல்லாவிதமான மேக வியாதிகளைப் போக்கி, புத்துயிர் அளித்து இல்லற இன்பத்தை அனுபவிக்கச் செய்து, யௌவனத்தைத் தரும்.



இம்மருந்து வெகு பிரயாசையின்பேரில் அதிகப் பணச் செலவினாலும், அநேகவிதமான மலையாள மூலிகை உலோக வஸ்துக்களைக் கொண்டும் முறைப்படி தயார் செய்தது.

இம் மருந்தை யுட்கொண்டு, தங்கள் தேகத்தில் உள்ள வியாதியை அகற்றுங்கள். உண்மை விளங்கும். ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

20-நாள் மருந்து .40 வேளைக்கு உபயோகிக்கக் கூடியது. பூரண குணத்துக்குப் போதுமானது. விலை ரூ. **2—4—0.**

**தனலட்சுமி கம்பெனி நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்**

## காப் கியூர் என்னும் க்ஷய அரி



கப இருமல், இரைப்பு அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டை யெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதி கொண்டிருந்தவரை தூங்கச் செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

## ஜி. கியூர்

### இது 3-தினத்தில் குணப்படுத்தும்

மேக உஷ்ணத்தால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.

## மயிர் போக்கும் சோப்



இது ஒவ்வொருவருக்கும் மிகவும் அத்தியாவசியமானது. சரீரத்தின் எந்தப் பாகத்திலுமுள்ள மயிரை இந்த சோப்பின் உதவியால் பிரயாசையின்றி வெகு சுலபமாய் போக்கிவிடலாம். மயிரைப் போக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி, அதன்மேல் இந்த சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் கழித்து காகித கார்டினாலாவது, ஓலைத் துண்டினாலாவது வழித்தால் அவ்விடத்திலுள்ள மயிர் யாவும் கழிந்து போகும். அந்த இடம் பிறகு மழமழப்பாக விருக்கும். இந்த சோப்பில் துர்நாற்றம் முதலியனை இரா. 3-சோப் கொண்ட பாக் 1-க்கு விலை ரூ. 1 0 0.

## மயிர் போக்கும் சூரணம்

இந்த சூரணத்தை ஜலத்தில் கலந்து, மயிர் போக்கவேண்டிய விடத்தில் தடவி உலர்ந்த பின் உடனே 5-நிமிஷம் பொறுத்து கழுவினால் மயிர் போய்விடும். புட்டி 1-க்கு விலை அணா 8.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்

## சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன்குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற் கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

ஏககாலத்தில் 3-பாக்கேட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம், வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

## மேஹ ராஜ சஞ்சீவி எண்ணெய்



இந்த எண்ணெயை ஒருமுறை மூன்றுநாள் சாப்பிட்ட மாத்திரத்திலேயே, கிரந்தி, மேக தாமரை, மேக நமைச்சல், மேக இரணம், மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக துர்நீர், மேக வெடிப்பு, எல்லாவகைகளான வெள்ளை, மூத்திரக் கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15 நாள் பொறுத்து, மற்றொரு முறை சாப்பிடவேண்டும்.

3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்து ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண நிலவரத்தை தெரியப்படுத்தவும்.

## சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை திரேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்துகொள்ளலாம்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6.

---

தனலட்சுமி கம்பெனி, 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்

# நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

| ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை. | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5பாகம் | 9 | 10 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ... | 1 | 4 |
| கடற்கொள்ளைக்காரன்2பாகம் | 3 | 4 |
| மதனும்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச் சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் ... | 0 | 14 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள் அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்தினபுரிரகசியம் 9பாகமும் | 18 | 2 |
| சந்திராபாய் ... | 2 | 0 |
| இராஜாமணி ... | 2 | 0 |
| இரத்தினுபாய் ... | 1 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணும்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாவனி ... | 0 | 14 |
| ஆனந்தவிங் ... | 2 | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 |
| ஆரூர் இலக்ஷ்மணன் ... | 2 | 0 |
| கைவல்லிய நவநீத வசனம் ... | 1 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |
| தத்வசங்க்ரஹ ராமாயணம் ... | 4 | 0 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| விவேகானந்தர் ... | 4 | 0 |
| தமிழ் மெடீரியா மெடிகா ... | 3 | 0 |
| மாதவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 |
| மலையாள பகவதி ... | 1 | 0 |
| அற்புத நவநீத ரமபை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |
| மோட்டி கார்த்தியாயினி ... | [illegible] | 12 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| துயராளன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மி கதை ... | 0 | 10 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளின சுந்தரி ... | 0 | 10 |
| கம்பராமாயண வசனசங்கிரகம் | 2 | 0 |
| குசேலோபாக்கியான வசனம் | 1 | 0 |
| ஸ்ரீபாலன் ... | 0 | 8 |
| உதயணன் ... | 0 | 7 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் வசனம் ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பீஷ்ம விஜயம் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| மூப்பெருந்தாசர் ... | 0 | 10 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 8 |
| பரசுராமன் ... | 0 | 8 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| அங்கதன் ... | 0 | 4 |
| தசாவதாரம் ... | 0 | 6 |
| கிருஷ்ணன் தூது வசனம் ... | 0 | 8 |
| சண்டோபாக்யானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்தியவசனி | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்புட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| காலுமந்திரி கதை ... | 0 | 4 |
| மங்களேசுவரன் ... | 0 | 6 |
| தக்கன் ... | 0 | 6 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| நான்குகோடி ... | 0 | 4 |
| மதிமோசவிளக்கம் ... | 1 | 0 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனுமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணகானன் ஞானநேத்திரி ... | 0 | 8 |
| [illegible]மணி கதை | 0 | 8 |
| [illegible]வல்லி கதை | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| தாலிகட்ட மறந்த கதை ... | 0 | 5 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

[library stamp]

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்டு.)

## "சகுந்தலா" கூந்தல் வளரும்

பரிமளத் தைலம்




டின் 1-க்கு விலை அணா 12.

இத்தைலத்தின் பரிமளம் எவருக்கும் இன்பத்தை யளிக்கும். இது கூந்தலை நீளமாக வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச் செய்யும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்களில் நீர்வடிதல், தலையில் புண், மயிர்வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோவியாகூலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்துத் தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். இந்தத் தைலம், பல வனமூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதில் ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் இதன் அருமை விளங்கும்.




## கிருஷ்ண சஞ்சீவி

தலைநோய், பாரிச வாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளைத் தீர்ப்பதில் இது முதன்மை பெற்றது. நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியைத் தடவி நன்றாய் இரண்டு மூன்று நிமிஷங்கள் வரை தேய்த்தால், அது மாயமாய் ஓடிவிடும். இவை குழந்தைகளுக்குக் காணும் வைத்திய நோய்களுக்கும் இதை உபயோகிக்கலாம். இதன் புட்டிகள் ஆயிரக் கணக்காகச் செலவழிந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருக்கவே வேண்டும். இதன் [illegible] புட்டி 1-க்கு அணா 8. [illegible] 1-க்கு [illegible]

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# "பிரசண்ட விகடன்"

## மாதம் இருமுறை வெளிவரும் ஒரு ஹாஸ்யப் பத்திரிகை.



இதின் சிறப்பாக அரசியல், சமூக இயல், சமய இயல் சம்பந்தமான எல்லா விஷயங்களும் விலாப் புடைக்கச் சிரிக்கச் செய்யும் தோரணையில் ஹாஸ்யமாகவும், வேடிக்கையாகவும், விநோதமாகவும், கேலியாகவும் வெளிவரும். ஏராளமான அபூர்வ அதி விசித்திரப் படங்கள் பத்திரிகையை அலங்கரித்து வரும். தேச சமூக விடுதலைக்கு உழைப்பது. இன்றே சந்தாதாரராகச் சேர முந்துங்கள்.

ஆண்டுச் சந்தா தபால் கூலி

உட்பட உள் நாடு ரூ. 2—0—0.

வெளி நாடு ரூ. 3—0—0.

தனிப்பிரதி விலை அணா 1½.

குறிப்பு:—ஏஜண்டுகளாக விரும்புவோர் எமது காரியாலயத்துக்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தகசாலைகளிலும் "சுதேசமித்திரன்" புஸ்தக சாலைகளிலும், எல்லா ஊர்களிலுமுள்ள ஏஜண்டுகளிடமும் "பிரசண்ட விகடன்" 1½ அணாவுக்கு விற்கப்படும்.

ஏஜண்டுகள் இல்லாத ஊருக்கு ஏஜண்டுகள் தேவை.

---

மானேஜர், "பிரசண்ட விகடன்" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்.

Edited, Printed & Published by N. Munisami Mudaliar,
at the "Ananda Bodhini" Press,
No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Madras